# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

## 4.1 பொதுநோக்கு

**பணவீக்கம் 2011இல் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஒற்றை இலக்க மட்டங்களில் தொடர்ந்து விளங்கியது.** ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் மற்றும் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் முறையே 2009 பெப்புருவரி மற்றும் 2009 ஓகத்திலிருந்து ஒற்றை இலக்க மட்டங்களிலேயே தொடர்ந்து காணப்பட்டது. 2011இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் (கொநுவிசு) (2006/07=100) அளவிடப்படும் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் பெப்புருவரியிலிருந்து படிப்படியாக மேல் நோக்கி நகர்ந்து ஆண்டிறுதியில் 6.7 சதவீத மெதுவடைவைப் பதிவுசெய்ய முன் செத்தெம்பரில் 7.2 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்தை அடைந்தது. 2011 பெப்புருவரியிலிருந்து அதிகரித்துச் செல்லும் போக்கைப் பின்தொடர்ந்த ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் 2011 ஏப்பிறலில் 8.9 சதவீதம் கொண்ட உயர் வீதத்தை அடைந்து 2011 திசெம்பரில் 4.9 சதவீதத்தைப் பதிவு செய்து மிதமடைந்தது. இவ்வாண்டின் முதல் சில மாதங்களில் அவதானிக்கப்பட்ட சாா்பு ரீதியிலான உயர் பணவீக்கம் முக்கியமான பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய பாதகமான காலநிலை நிலைமைகளால் ஏற்படுத்தப்பட்ட வழங்கல் தடைகள் காரணமாக விலைகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பால் ஏற்பட்டது. வழங்கல் தடைகள் காரணமாக விலை அதிகரித்துச் செல்லல் தற்காலிகமாக இருந்த போதிலும் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்கத்திலான அதிகரிப்பு 2010 இலான தாழ்ந்த தளம் காரணமாக சில மாதங்களுக்கு நீடித்து நிலைத்திருந்தது. மேலும், இவ்வாண்டில் குறிப்பாக திரவப் பெற்றோலிய வாயு மற்றும் பெற்றோலிய உற்பத்திகளின் நிருவகிக்கப்பட்ட விலைகளின் மேல் நோக்கிய பல திருத்தங்களும் வேறுபட்ட அளவுகளில் பணவீக்கத்தில் நேரடியாகவும் எதிர்மறையாகவும் பாதிப்பை ஏற்படுத்தியது. இவ்வாண்டில் உண்மைக்கூலி அதிகரிப்புக்களும் கேள்விப் பக்கத்தில் விலைகள் மீது ஓரளவு அழுத்தத்தை ஏற்படுத்தின. எனினும், சாா்பு ரீதியில் உறுதியான செலாவணி வீதத்திற்கு மத்தியில் பன்னாட்டுச் சந்தையில் முக்கிய உணவுப் பொருட்களின் விலைகள் மெதுவடைவதுடன் இணைந்து உள்நாட்டு வழங்கல் நிலைமைகளிலான கணிசமான மேம்பாடுகள் 2011இல் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த உதவின. சாதகமான பணவீக்க எதிர்பார்ப்புக்களும் பொது விலை மட்டம் மீதான தேவையற்ற அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவின. இதேவேளை, 2011 மாச்சிலிருந்து 2011 யூலைக்கு அதிகரித்துச் செல்லும் போக்கைத் தொடர்ந்து பின்தொடர்ந்த ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2011 ஓகத்தில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்து கீழ் நோக்கிச் செல்லும் போக்கைத் தொடர்ந்து 2011 திசெம்பரில் 4.7 சதவீதத்தை அடைந்தது. இதே நேரத்தில் 2011 செத்தெம்பர் வரை தொடர்ந்து படிப்படியாக அதிகரித்த ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் இதன் பின்னர் தொடர்ந்து மெதுவடைந்து ஆண்டிறுதியில் 6.9 சதவீதத்தைப் பதிவு செய்தது.

**அரச மற்றும் தனியார் துறைகள் இரண்டிலுமுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2011இல் அதிகரித்தன.** வாழ்க்கைச் செலவுப் படியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் படி 2011 சனவரியிலிருந்து சில வகை அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் படி அரச துறை கூலிகளில் பெயரளவு அதிகரிப்பை ஏற்படுத்தியது. முறைசாரா தனியார் துறையின் பெயரளவுக் கூலிகள் 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் கணிசமானளவில் அதிகரித்தன. அவர்களின் உண்மைக் கூலிகளும் அதிகரித்தன. கூலி நிர்ணயச் சபைகளால் ஆளுகைப்படுத்தப்படும் முறைசாா் தனியாா் துறையின் ஆகக் குறைந்த கூலிகளும் பெயரளவு நியதிகளில் அதிகரித்திருக்கையில் அதிகரிப்பானது கைத்தொழில் மற்றும்

வரைபடம் 4.1 கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2006/07=100)




வியாபாரத்துறை மற்றும் பணிகள் துறையில் கூடியளவில் குறிப்பிடத்தக்கதாக விளங்கியது. நன்கமைந்த தனியார் துறையில் உள்ள இவ்விரு துறைகளும் உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும், வேளாண்மைத் துறை ஊழியர்கள் 2011இல் அவர்களின் உண்மைக் கூலிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் பாதிப்புக்குள்ளாகினர். இதன் காரணமாக, 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் முறைசார் தனியார் துறையில் பொதுவான உண்மைக் கூலி வீதச் சுட்டெண்ணில் ஓரளவு குறைவடைவு காணப்பட்டது. பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு விலை மட்டத்திலான அதிகரிப்பால் முழுமையாக எதிரீடு செய்யப்பட்டமையால் அரச துறையின் பொதுவான உண்மைக் கூலி வீதச் சுட்டெண் கடந்த ஆண்டைப் போலவே மாற்றமின்றி விளங்கியது.

**தொழிலின்மை வீதம் 2010இன் 4.9 சதவீதத்திலிருந்து 2011இல் முன்னெப்போதும் இல்லாத ஆகக் குறைந்த வீதமான 4.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.** பல தரப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களால் பூர்த்தி செய்யப்பட்ட பரந்த அளவிலான பொருளாதார வளர்ச்சி இவ்வாண்டில் தொழிலின்மையைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்தது. முக்கிய கைத்தொழில் தொகுதிகளிடையே தொழில்நிலையின் உள்ளடக்கத்தில் மாற்றமொன்று 2011இல் அவதானிக்கப்பட்டது. இதன்படி, மொத்தத் தொழில்நிலையில் வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளின் பங்குகள் 2011இல் அதிகரித்திருக்கையில் பணிகள் துறையின் பங்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், கடந்த சில ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கு ஆகக்கூடிய பங்களிப்பை வழங்கிய பணிகள் துறை 2011இலும் கூடிய தொழில் வாய்ப்புக்களை தொடர்ந்து உருவாக்கியது. இளைஞர் தொழிலின்மையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி 2011இல் அவதானிக்கப்பட்டது. பணம் செலுத்தாத குடும்பப் பணியாளர்கள், சுயதொழில் புரிவோர் மற்றும் அரச துறை ஊழியர்களிலிருந்தான கூடிய பங்களிப்புடன் தொழில்நிலையின் அனைத்து வகைகளிலுள்ள தொழில்நிலை 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் மேம்பாடடைந்தது. இதேவேளை, கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட தொழிலாளர் உற்பத்தித்திறனிலான மேம்பாடு 2011இலும் தொடர்ந்தது. வெளிநாட்டு தொழில்நிலையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் வெளிநாட்டு தொழில்நிலைக்காக செல்லும் வெளிச்செல்கைகளின் தொடர்பான எண்ணிக்கையில் அவதானிக்கப்பட்ட சிறு மெதுவடைவிற்கு மத்தியிலும் 2011இல் தொடர்ந்து அதிகரித்தன.

## 4.2. விலைகள்

### விலை அசைவுகளும் பங்களிப்புக் காரணிகளும்

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொநுவிசு)

**கொநுவி சுட்டெண்ணால் (2006/07=100) அளவிடப்படும் பொது விலைமட்டம் கேள்வி மற்றும் நிரம்பல் பக்கத்துக் காரணிகள் இரண்டினதும் இணைந்த விளைவுகள் காரணமாக 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் அதிகரித்தது.** முழுமையான நியதிகளில் சுட்டெண் 2010 திசெம்பரில் 147.2 இலிருந்து 2011 திசெம்பரில் 154.4 இற்கு 7.2 சுட்டெண் புள்ளிகளால் அதிகரித்தது. இது 2011இல் 6.7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்த கொநுவிசுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி மாற்றத்தை அல்லது சராசரி பணவீக்கத்தைப் பிரதிபலிக்கிறது. ஆண்டுச் சராசரிப் பணவீக்க வீதம் இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் 6 சதவீதமளவில் மாற்றமின்றி விளங்கியதுடன் பின்பு 2011 செத்தெம்பரில் 7.2 சதவீதம் கொண்ட உயர்ந்த மட்டத்தை அடைந்தது. இதைத் தொடர்ந்து, இது 2011 திசெம்பரில் 6.7 சதவீதத்திற்கு படிப்படியாக மெதுவடைந்தது. ஆண்டுக்கு ஆண்டு

அட்டவணை 4.1 விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

| சுட்டெண் | சாராசரிச் சுட்டெண் | | | ஆண்டுக்காண்டு சதவீதமாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 (அ) | திசெ 2010/ திசெ 2009 | திசெ 2011/ திசெ. 2010 (அ) | 2010/2009 | 2011/2010 (அ) |
| கொநுவிசு (2006/07=100) | 133.6 | 141.9 | 151.5 | 6.8 | 4.9 | 6.2 | 6.7 |
| மொ.வி.சு (1974=100) | 3,500.9 | 3,893.0 | 4,306.5 | 17.6 | -6.1 | 11.2 | 10.6 |
| மொ.உ.உ.சுருக்கி | 315.8 | 338.9(ஆ) | 365.4 | - | - | 7.3 | 7.8 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 9 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படை ஆண்டை 2006/07 இற்கு மீளமைத்தல்

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு) அடிப்படை ஆண்டை 2007 நவெம்பரில் 1952 இலிருந்து 2002இற்கு மீளமைத்தது. இதேவேளை, காலப்பகுதியில் மாற்றமடைந்து வரும் நுகர்வோர் விருப்பத்தேர்வை பிரதிபலிக்கும் பொருட்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை கொநுவிசுட்டெண்ணின் அடிப்படையாண்டை மீளமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 2011இல் கொநுவி சுட்டெண்ணின் அடிப்படை ஆண்டை 2006/07 இற்கு திருத்தியமைத்தது. அடிப்படை ஆண்டை மீளாய்வு செய்தல் பொருட்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட நிறைகளைப் புதுப்பித்தல், புதிய பொருட்களைச் சேர்த்தல் மற்றும் தேவை ஏற்படின் ஏற்கனவேயுள்ள சில பொருட்களை நீக்குதல் என்பவற்றை முன்னெடுக்கிறது. இது புதிய அடிப்படைக் காலப்பகுதியில் நுகர்வு மாதிரியை பிரதிபலிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகிறது. இதன்படி, கொநுவிசுட்டெண்ணின் நிறையிடல் முறைமை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2006/07 இல் நடத்தப்பட்ட குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீட்டின் அடிப்படையில் இத்திணைக்களத்தால் திருத்தி அமைக்கப்பட்டது. இத்திருத்தம் காரணமாக, அடிப்படை ஆண்டு 2002 ஐக் கொண்ட கொநுவி சுட்டெண்ணின் முன்னைய தொடர் 2011 யூனிலிருந்து இடைநிறுத்தப்பட்டதுடன் கொநுவி சுட்டெண்ணின் (2006/07=100) புதிய தொடர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கொநுவி சுட்டெண் அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணாகத் தொடர்ந்து விளங்கி பிரயோகிக்கத்தக்கவிடத்து தொழிலாளர்களுக்குச் செலுத்தக்கூடிய வாழ்க்கைச் செலவுப் படியைத் தீர்மானிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. பொதுவிலை மட்டத்தையும் அதன் மூலம் பல்வேறு கொள்கை உருவாக்கங்களில் பயன்படுத்தப்படும் முக்கிய பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டியான பணவீக்கத்தையும் அளவிடுவதற்கு கொநுவிசுட்டெண் பயன்படுத்தப்படுவதால் கொநுவி சுட்டெண்ணின் பொருத்தப்பாட்டையும் பிரதிநிதித்துவத்தையும் பேணுவது அவசியமாகும். இப்பின்னணியில், விலைச் சுட்டெண்களின் அடிப்படை ஆண்டை மீளமைத்தல் கொள்கை உருவாக்க விடயத்தில் மிகவும் முக்கியமானதாக வந்துள்ளது.

கொநுவிசு (2006/07=100) இன் முக்கிய பண்புகள் கொநுவிசு (2002=100)இன் ஒப்பீட்டுடன் அட்டவணை சி.கு. 9.1இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை சி.கு. 9.1 கொநுவிசு (2002=100) மற்றும் கொநுவிசு (2006/07=100) இன் முக்கிய பண்புகள்**

| கூறு | கொநுவிசு (2002=100) | கொநுவிசு (2006/07=100) |
|---|---|---|
| அடிப்படைக் காலப்பகுதி | 2002 | 2006/07 |
| தொடர்பான குடித்தொகை | அனைத்து நகரங்கள் | அனைத்து நகரங்கள் |
| பூகோள உள்ளடக்கம் | கொழும்பு மாவட்டம் | கொழும்பு மாவட்டம் |
| பூகோள உள்ளடக்கம் | 1300 குடும்ப அலகுகள் | 1,200 குடும்ப அலகுகள் |
| விலை சேகரிப்பு நிலையங்கள் (அ) | 12 | 14 |
| பொருட்களின் எண்ணிக்கை | 334 | 373 |
| மொத்த கூடைப் பெறுமதி (ரூ.) | 17,996.38 | 27,972.11 |

*மூலம்:* தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அ கொநுவிசு (2002=100) இன் கீழுள்ள புறக்கோட்டை, மருதானை, வெள்ளவத்தை, தெமட்டகொட, கிராண்ட்பாஸ், கிருலப்பனை, தெஹிவளை, கோட்டே, நுகேகொட, கொலன்னாவ மற்றும் இரத்மலானையிலுள்ள 12 விலை சேகரிப்பு நிலையங்களுக்கு மேலதிகமாக கொநுவிசு (2006/07=100) இற்காக இரத்மலானை மற்றும் நாரகேன்பிட்டியிலுள்ள விசேட பொருளாதார நிலையங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2002 அடிப்படை ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வைப் போலவே கொநுவிசு (2006/07=100) இன் பொருட்கள் கூடையில் உள்ளடக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் ஐக்கிய நாடுகள் தேசிய கணக்குகள் முறைமையால் அறிமுகப்படுத்தப்பட்ட "நோக்கப்படியான தனியார் நுகர்வின் வகைப்படுத்தலின்படி" வகைப்படுத்தப்பட்டுள்ளன. விலை சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை 12 இலிருந்து 14 இற்கு அதிகரித்திருக்கையில் பொருட்களின் எண்ணிக்கை 334 இலிருந்து 373 இற்கு அதிகரித்தது. இதில் 11 வகைகள் இருப்பதுடன் "சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள்" புதிய வகையாக நோக்கப்படியான தனியாள் நுகர்வின் வகைப்படுத்தலின்படி சேர்க்கப்பட்டுள்ளது. புதிய சுட்டெண்ணிலுள்ள இவ்வகை, முன்னைய வகையின் கொநுவிசு (2002=100) 'வெளியிலிருந்து வாங்கப்பட்ட உணவுகள்' போன்று இருப்பதனால் இது ஒப்பிடக் கூடியதாக இருக்கின்றது.

அடிப்படை ஆண்டின் மீளாய்வுடன் நிறை அமைப்பு மாற்றமடைந்துள்ளது. இதன்படி, மிகப் பெரிய துணைத் தொகுதியான "உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகையின்" நிறை முன்னைய சுட்டெண்ணிலான 46.7 சதவீதத்திலிருந்து புதிய சுட்டெண்ணில் 41.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், நலத்துறை, களியாட்டம் மற்றும் கலாச்சாரம் மற்றும் கல்வி என்பவற்றின் நிறைகள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்திருக்கையில் ஏனைய அனைத்து வகைகளும் அவற்றின் நிறைகளில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

அட்டவணை சி.கு. 9.2 கொநுவி சுட்டெண்ணின் இரு வெவ்வேறான அடிப்படை ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட முக்கிய வகைகளின் நிறைகளை ஒப்பிடுகிறது.

**அட்டவணை சி.கு. 9.2 முக்கிய வகைகளின் படி கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் நிறைகள்**

| | தொகுதி | கொநுவிசு அடிப்படை: 2002=100 (%) | கொநுவிசு அடிப்படை: (2006/07=100) (%) |
|---|---|---|---|
| 1. | உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகை | 46.71 | 41.03 |
| 3. | புடவை மற்றும் காலணி | 3.08 | 3.14 |
| 4. | வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள் | 18.29 | 23.72 |
| 5. | தளபாடம், வீட்டுப்பாவனைப் பொருள் மற்றும் கிரமமான வீட்டுப் பேணல் | 3.22 | 3.60 |
| 6. | நலத்துறை | 4.18 | 3.16 |
| 7. | போக்குவரத்து | 9.47 | 12.26 |
| 8. | தொடர்பூட்டல் | 4.42 | 4.75 |
| 9. | களியாட்டம் மற்றும் கலாச்சாரம் | 2.18 | 1.50 |
| 10. | கல்வி | 5.79 | 3.94 |
| 12. | பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் | 2.65 | 2.89 |
| | மொத்தம் | 100.00 | 100.00 |

*மூலம்:* தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

இதேநேரத்தில், முக்கியமாக கொள்கை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் மையப் பணவீக்கச் சுட்டெண்ணும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் திருத்தப்பட்டது. இதன்படி, ஒட்டுமொத்த கொநுவிசு கூடையிலிருந்து உணவு மற்றும் வலு விடயங்களை முழுமையாக நீக்குவதற்குப் பதிலாக கூடையிலிருந்து உடன் உணவு, வலு, போக்குவரத்து, அரிசி மற்றும் தேங்காயை நீக்குவதன் மூலம் மையச் சுட்டெண் தொகுக்கப்படுகிறது. மையப் பணவீக்கத்தைத் தொகுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கூடை ஒட்டுமொத்தச் சுட்டெண்ணில் கிட்டத்தட்ட 65 சதவீதத்தைப் பிரதிநிதித்துப்படுத்துகிறது.

**அட்டவணை 4.2 இறக்குமதிகள் செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்**

| விடயம் | அலகு | கொநுவிசு (2006/07=100) நிறை % | விலை - ரூபா | | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்டுச் சராசரி | | | திசெ. 2009 | திசெ. 2010 | திசெ. 2011 (அ) | ஆண்டுச் சராசரி | | ஆண்டுக்காண்டு | |
| | | | 2009 | 2010 | 2011 (அ) | | | | 2010/ 2009 | 2011/ 2010 (அ) | திசெ.2010/ திசெ.2009 | திசெ.2011/ திசெ.2010 (அ) |
| உள்நாட்டு அரிசி சம்பா | 1கி.கி | 1.96 | 72.66 | 72.05 | 68.38 | 77.54 | 72.30 | 68.19 | -0.8 | -5.1 | 13.4 | -6.8 |
| அரிசி - பச்சை (சிவப்பு) | 1கி.கி | 0.85 | 62.53 | 60.14 | 57.27 | 65.55 | 59.19 | 56.80 | -3.8 | -4.8 | 14.5 | -9.7 |
| அரிசி - பச்சை (வெள்ளை) | 1கி.கி | 0.60 | 61.74 | 54.26 | 56.58 | 63.19 | 57.89 | 56.33 | -12.1 | 4.3 | 11.7 | -8.4 |
| அரிசி - நாடு | 1கி.கி | 0.35 | 63.53 | 60.79 | 59.25 | 67.88 | 60.95 | 58.95 | -4.3 | -2.5 | 14.6 | -10.2 |
| தேங்காய் (நடுத்தரம்) | 1காய் | 1.84 | 26.01 | 33.59 | 41.01 | 29.64 | 47.18 | 33.78 | 29.1 | 22.1 | -27.7 | 59.2 |
| மீன் - கெலவல்ல | 1கி.கி | 1.11 | 523.43 | 598.15 | 632.32 | 523.33 | 639.43 | 652.30 | 14.3 | 5.7 | -17.2 | 22.2 |
| அவரை | 1கி.கி | 0.43 | 114.99 | 135.26 | 167.34 | 134.22 | 157.17 | 175.07 | 17.6 | 23.7 | -19.8 | 17.1 |
| கத்தரி | 1கி.கி | 0.19 | 76.75 | 87.04 | 90.84 | 103.70 | 105.75 | 87.31 | 13.4 | 4.4 | 14.2 | 2.0 |
| முட்டை | ஒவ்வொன்றும் | 0.37 | 10.75 | 13.60 | 11.64 | 15.19 | 16.53 | 9.67 | 26.5 | -14.4 | 30.5 | 8.8 |
| இறக்குமதிகள் சீனி | 1கி.கி | 1.12 | 81.97 | 93.78 | 96.11 | 88.50 | 99.61 | 92.91 | 14.4 | 2.5 | -7.9 | 12.6 |
| பால்மா-அங்கர் | 400கி | 3.21 | 251.73 | 234.35 | 255.92 | 225.00 | 244.00 | 264.00 | -6.9 | 9.2 | -12.1 | 8.4 |
| சிவப்பு-பருப்பு | 1கி.கி | 0.73 | 199.70 | 165.40 | 149.20 | 177.33 | 168.32 | 131.95 | -17.2 | -9.8 | 18.9 | -5.1 |
| கோதுமை மா | 1கி.கி | 0.20 | 70.84 | 69.61 | 83.92 | 71.67 | 82.43 | 84.07 | -1.7 | 20.6 | -14.6 | 15.0 |

(அ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

பணவீக்கம் 2011இன் முதல் நான்கு மாதங்களில் அதிகரித்துச் செல்லும் போக்கைப் பின்பற்றியதுடன் 2011 திசெம்பரில் 4.9 சதவீதத்திற்கு மெதுவடைய முன்பு ஏப்பிறலில் 8.9 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்தை அடைந்தது.

**பொதுவான சுட்டெண்ணினுள் உணவு துணைச் சுட்டெண்ணின் ஆதிக்க பங்கு காரணமாக 2011இல் பணவீக்கம் இதில் ஏற்பட்ட மாற்றங்களுடன் இணைந்து செல்லும் வகையில் நகர்ந்தது.** கொநுவி சுட்டெண்ணில் 41.0 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய நிறையைக் கொண்டிருந்த உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள் துணைச் சுட்டெண் இவ்வாண்டில் பொதுவான கொநுவிசுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி மாற்றத்துக்கு 60 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. 2011 சனவரியில் 7.1 சதவீதத்தினால் அதிகரித்து வந்த உணவு துணைச் சுட்டெண்ணிலான ஆண்டுச் சராசரி மாற்றம் 2011 ஓகத்தில் 10.7 சதவீதத்தைக் கொண்ட உச்ச மட்டத்தை அடைந்து பின்பு திசெம்பர் 2011இல் 8.8 சதவீதத்துக்கு மெதுவடைந்தது. உணவு துணைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பு 2011 இறுதியில் 2.5 சதவீதமாக விளங்கியது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில் பருப்பு, முட்டை, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்ற முக்கிய பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்த போதிலும் உடன் மரக்கறிகள், பழங்கள், மீன் மற்றும் கடல் உணவு, இறைச்சி, பாண், தானியங்கள், பால்மா, சரக்குச்சாமான் மற்றும் வெளியிலிருந்து வாங்கப்பட்ட உணவுகள் உணவு துணைச் சுட்டெண்ணிலான அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தன.

**சந்தையில் போதியளவு இருப்புக்களின் கிடைப்பனவு அது போல் 2010 திசெம்பரிலிருந்து அரசாங்கத்தால் அரிசி மீது விதிக்கப்பட்ட விலை உச்ச வரம்புகள் 2011இல் அரிசியின் சராசரி விலையை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு பங்களிப்புச் செய்தன.** 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் நெல் உற்பத்தி 9.9 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்த போதிலும் அரிசி விலை 2011இல் சராசரியாக 2.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முக்கியமான உற்பத்திப் பிரதேசங்களில் நிலவிய பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக பெரும்போகத்தில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட பின்னடைவுக்கு பதிலிறுக்கும் விதத்தில் அனைத்து வகை அரிசியின் விலைகள் 2011 பெப்புருவரி மற்றும் மாச்சில் சிறு அதிகரிப்புக்களைப் பதிவு செய்த போதிலும் விலைகள் செத்தெம்பர் வரை மெதுவடைய ஆரம்பித்தன. சிறுபோகத்தில் பெறப்பட்ட அபரிமித அறுவடை அரிசியின் உள்நாட்டு நிரம்பலுக்கு உதவியதுடன் விலைகளையும் மிதமடையச் செய்தது. எனினும், பருவகால காரணிகள் காரணமாக ஆண்டிறுதியில் விலைகளில் சிறிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

**தாழ்நில மற்றும் மலைநாட்டு மரக்கறிகள் மற்றும் இலை மரக்கறிகளின் அனைத்து வகைகளினதும் சராசரி விலைகள் 2011இல் அதிகரித்தன.** இவ்வதிகரிப்பு பெரும்பாலும் முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் நிலவிய பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக இவ்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய வழங்கல் பற்றாக்குறைகளால் ஏற்பட்டது. எனினும், வழங்கலில் ஏற்பட்ட மேம்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மரக்கறிகளின் விலைகள் ஏப்பிறலிலிருந்து கணிசமானளவில் மெதுவடையத் தொடங்கிய போதிலும் பருவகால காரணிகள் காரணமாக ஆண்டிறுதியில் படிப்படியாக அதிகரித்தன. மேற்கூறிய விருத்திகளின் ஒட்டுமொத்த தாக்கம் 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் மரக்கறிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி விலையை 7.4 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தது. இதேவேளை, தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் 2011இல் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய்யின்

**அட்டவணை 4.3** 2009 - 2011 இல் முக்கிய பொருட்களின் நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள்

| விடயம் | அலகு | விலை (ஆண்டு இறுதி) - ரூ. | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | 2009 | 2010 | 2011 | 2010/2009 | 2011/2010 |
| டீசல் | 1 லீற்றர் | 73.00 | 73.00 | 84.00 | 0.0 | 15.1 |
| மண்ணெண்ணெய் | 1 லீற்றர் | 51.00 | 51.00 | 71.00 | 0.0 | 39.2 |
| பெற்றோல் | 1 லீற்றர் | 115.00 | 115.00 | 137.00 | 0.0 | 19.1 |
| எரிவாயு - ஷெல்/லிட்றோ (அ) | 12.5 கி.கி | 1,550.00 | 1,652.00 | 2,046.00 | 6.6 | 23.8 |
| எரிவாயு - லாப் | 12.5 கி.கி | 1,421.00 | 1,520.00 | 2,046.00 | 7.0 | 34.6 |
| உலை எண்ணெய் (1000) | 1 லீற்றர் | 52.70 | 48.70 | 48.70 | -7.6 | 0.0 |
| உலை எண்ணெய் (1500) | 1 லீற்றர் | 32.70 | 40.00 | 50.00 | 22.3 | 25.0 |
| உலை எண்ணெய் (3500) | 1 லீற்றர் | 26.00 | 40.00 | 50.00 | 53.8 | 25.0 |
| மின்சாரம் - நிலையான கட்டணங்கள் தீர்வைத்தொகுதி | | | | | | |
| | முதல் 30 அலகுகள் | 60.00 | 60.00 | 30.00 | 0.0 | -50.0 |
| | 31 - 60 அலகுகள் | 90.00 | 90.00 | 60.00 | 0.0 | -33.3 |
| | 61 - 90 அலகுகள் | 120.00 | 120.00 | 90.00 | 0.0 | -25.0 |
| | 91 - 180 அலகுகள் | 180.00 | 180.00 | 315.00 | 0.0 | 75.0 |
| | 180 இற்கு மேற்பட்ட அலகுகள் | 240.00 | 240.00 | 315.00 | 0.0 | 31.3 |
| மின்சாரம் - அலகுக்கான கட்டணங்கள் தீர்வைத்தொகுதி | | | | | | |
| | முதல் 30 அலகுகள் | 3.00 | 3.00 | 3.00 | 0.0 | 0.0 |
| | 31 - 60 அலகுகள் | 4.70 | 4.70 | 4.70 | 0.0 | 0.0 |
| | 61 - 90 அலகுகள் | 7.50 | 7.50 | 7.50 | 0.0 | 0.0 |
| | 91 - 120 அலகுகள் | 16.00 | 16.00 | 21.00 | 0.0 | 31.3 |
| | 121 - 180 அலகுகள் | 16.00 | 16.00 | 24.00 | 0.0 | 50.0 |
| | 181 - 600 அலகுகள் | 25.00 | 25.00 | 36.00 | 0.0 | 44.0 |
| | 600 இற்கு மேற்பட்ட அலகுகள் | 25.00 | 25.00 | 36.00 | 0.0 | 44.0 |
| நீர் - அலகுக்கான கட்டணங்கள் தீர்வைத்தொகுதி | | | | | | |
| | 00 - 05 அலகுகள் | 3.00 | 3.00 | 3.00 | 0.0 | 0.0 |
| | 06 - 10 அலகுகள் | 7.00 | 7.00 | 7.00 | 0.0 | 0.0 |
| | 11 - 15 அலகுகள் | 15.00 | 15.00 | 15.00 | 0.0 | 0.0 |
| | 16 - 20 அலகுகள் | 30.00 | 30.00 | 30.00 | 0.0 | 0.0 |
| | 21 - 25 அலகுகள் | 50.00 | 50.00 | 50.00 | 0.0 | 0.0 |
| | 26 - 30 அலகுகள் | 75.00 | 75.00 | 75.00 | 0.0 | 0.0 |
| பேருந்து கட்டணம் | | - | - | - | 0.0 | 7.6 |

(அ) 2010இலிருந்து விலைகள் லிட்றோவின் விலையைக் குறிக்கின்றது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

விலைகள் 2010 உடன் ஒப்பிடுகையில் முறையே 24.7 சதவீதத்தாலும் 27.8 சதவீதத்தாலும் அதிகரித்தன. சின்ன வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கின் உள்நாட்டு விலைகளும் சராசரியாக முறையே 61.9 சதவீதத்தாலும் 10.5 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில் பெரிய வெங்காயத்தின் விலை 5.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயத்தின் விலைகள் 2011 சனவரிக்கும் திசெம்பருக்குமிடையே முறையே 35.0 சதவீதத்தாலும் 63.9 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

**பெரும்பாலும் அதிகரித்த கேள்வி மற்றும் மாறுபடும் வானிலை நிலைமைகளுடன் வழங்கலில் ஏற்பட்ட தளம்பல்கள் காரணமாக உடன் மீன் மற்றும் கடலுணவின் விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சராசரியாக உயர்வாகக் காணப்பட்டன.** 2011இல் மீன் உற்பத்தி 15.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததற்கு மத்தியிலும் உடன் மீனின் நிறையேற்றப்பட்ட சராசரி விலை 2010 உடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீதத்தால் அதிகரித்தது. அநேக வகையான மீனின் விலைகள் 2011இல் 0.4 - 13.4 சதவீத வீச்சினுள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும், சாதகமான வானிலை நிலைமைகளால் உதவப்பட்ட பருவகால காரணிகள் காரணமாக பெப்புருவரியிலிருந்து ஏப்பிறல் வரையும் செத்தெம்பரிலிருந்து நவெம்பர் வரையும் மீன் விலைகளில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அதிகரித்த மீன் விலைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அனைத்து வகை கருவாடுகளின் விலைகளும் அதிகரிப்புக்களைக் காட்டின. இதேவேளை, கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் 2011இல் சராசரியாக முறையே 3.4 சதவீதத்தாலும் 13.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக முட்டை விலைகள் 2011 சனவரியிலிருந்து திசெம்பர் வரை 28.4 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன.

**அண்மைக்கால பூகோள அரசியல் பதற்றங்கள் மற்றும் பன்னாட்டுச் சந்தையில் வழங்கல் தொடர்பாக உணரப்பட்ட இடர்நேர்வுகளைத் தொடர்ந்து ஏற்பட்ட வழங்கல் தடைகள் காரணமாக எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயுவின் விலைகள் பன்னாட்டு விலை அதிகரிப்புகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் பல தடவைகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டமை பொது விலைமட்டத்தில் அதன் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.** 2011 சனவரியில் பீப்பா ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 95.33 ஆக விளங்கிய மசகெண்ணெய்யின் இறக்குமதி விலை 2011 ஏப்பிறலில் பீப்பா ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 119.45 இற்கு உச்ச நிலையை அடைந்த போதிலும் குறிப்பிடத்தக்க தளம்பல்களுடன் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 2011 இறுதியில் பீப்பா ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 110.57 ஆக விளங்கியது. இதன்படி, 2011இல் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் சராசரி விலை 2010இன்

பீப்பா ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 79.52 இலிருந்து 2011இல் பீப்பா ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 108.59 இற்கு 36.6 சதவீதத்தால் அதிகரித்ததுடன் உள்ளூர் எரிபொருள் விலைகளின் மேல் நோக்கிய திருத்தத்திற்கு நிர்ப்பந்தித்தது. இவ்விலைத் திருத்தங்கள் 2011இல் லீற்றர் ஒன்றுக்கான டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய்யின் விலைகளை முறையே 15.1 சதவீதம், 19.1 சதவீதம் மற்றும் 39.2 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தன. குறிப்பாக, டீசல் விலை உள்ளிட்ட இத்திருத்தங்கள் அதிகரித்துச் செல்லும் உற்பத்தி மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களூடாக பொருட்களின் சில்லறை விலைகள் மீது பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. பேருந்துக் கட்டணங்களும் 2011 யூலை 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 7.6 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன. இதேவேளை, லாவ் மற்றும் லிற்றோ பெற்றோலிய வாயுவின் 12.5 கிலோகிராம் உருளையின் விலையும் 2011இல் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டன. மேற்கூறிய விலைத் திருத்தங்களின் ஒட்டுமொத்தத் தாக்கம் 2011 சனவரியிலிருந்து திசெம்பர் வரை திரவப் பெற்றோலிய வாயுவின் விலையை சராசரியாக 29.0 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தது. இவ்விலைத் திருத்தங்களும் தயாரிக்கப்பட்ட உணவின் அதிகரித்த விலைகளூடாக கொநுவிசுட்டெண் மீது மறைமுகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

**பன்னாட்டுச் சந்தையிலான விலை அதிகரிப்புகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் இவ்வாண்டில் பல முக்கிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.** இதன்படி, கோதுமை மாவின் விலை 2011 ஏப்பிறல் 19 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கிலோகிராம் ஒன்றுக்கு ரூ.3 ஆல் அதிகரிக்கப்பட்டதுடன் 450 கிறாம் பாணின் விலையை ரூ.2 ஆல் அதிகரிப்பதற்கு வழியமைத்தது. இதன் விளைவாக, கோதுமை மா மற்றும் பாணின் சராசரி விலைகள் 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் முறையே 21.1 சதவீதத்தாலும் 17.2 சதவீதத்தாலும் அதிகரித்தன. மேலும், 400 கிறாம் பால்மா பைக்கற்றின் ஆகக் கூடிய விற்பனை விலை 2011 மே 03 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ரூ.20 ஆல் அதிகரிக்கப்பட்டு 2011இல் சராசரி விலையில் 8.6 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

**இவ்வாண்டில் பல தடவைகளில் குறிப்பிட்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான சிறப்புப் பண்ட தீர்வையின் மேல் நோக்கிய திருத்தமும் கொநுவிசுட்டெண் மீது ஓரளவு அழுத்தத்தைக் கொண்டிருந்தது.** இதன்படி, வேளாண்மையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் உள்நாட்டுச் சந்தையில் விலைகளை உறுதிப்படுத்தும் பொருட்டும் உருளைக்கிழங்கு மீதான சிறப்புப் பண்டத்தீர்வை 2011இல் கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.10 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.35 இற்கு பல தடவைகளில் அதிகரிக்கப்பட்டது. இது போலவே, பெரிய வெங்காயம் மற்றும் உள்ளி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை 2011 ஓகத்து 10 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.10 இலிருந்து ரூ.25 இற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது. இத்துடன், அரைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட செத்தல் மிளகாய் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2011 ஒத்தோபர் 13 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.40 ஆல் அதிகரிக்கப்பட்டிருக்கையில் மாசிக் கருவாடு மற்றும் கருவாடு மீதான சிறப்புப் பண்டத்தீர்வை 2011 நவெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கிலோக்கிறாம் ஒன்றுக்கு முறையே ரூ.250 ஆலும் ரூ.100 ஆலும் அதிகரிக்கப்பட்டது. இவ்வரித் திருத்தங்கள் கொநுவிசுட்டெண் மீது ஓரளவு தாக்கத்தைக் கொண்டிருந்த போதிலும் இது அளவுக்கதிகமான அளவுகளில் இவற்றின் இறக்குமதியை ஊக்கமிழக்கச் செய்வதன் மூலம் இப்பொருட்களின் உள்ளூர் உற்பத்தியாளர்களை பாதுகாக்க உதவியது. எனினும், 2011இல் ஆண்டுச் சராசரி அடிப்படையில் ரூபாவானது 2.26 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்தமை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களூடாக கொநுவிசுட்டெண் மீதான அழுத்தத்தை ஓரளவுக்குக் குறைக்க உதவியது.

**வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள்; போக்குவரத்து; புடவை மற்றும் காலணி என்பவற்றின் துணைச் சுட்டெண்களிலான அதிகரிப்புகளும் சுட்டெண்ணிலான ஆண்டுச் சராசரி மாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தன.** இவ்வகைகள் 2011இல் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்புக்கு முறையே 12.8 சதவீதம், 12.7 சதவீதம் மற்றும் 5.7 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. போக்குவரத்து துணைச் சுட்டெண்ணிலான அதிகரிப்பு பெரும்பாலும் எரிபொருள் விலைகள் மற்றும் பேருந்துக் கட்டணங்களின் மேல் நோக்கிய திருத்தங்களால் ஏற்பட்டது. சுட்டெண்ணின் ஏனைய துணைத் தொகுதிகளான நலத்துறை; கல்வி; தளபாடம், வீட்டுப் பாவனைப்பொருட்கள் மற்றும் கிரமமான பேணல்; பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள்; பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம்; மற்றும் தொடர்பூட்டல் என்பன ஆண்டுச் சராசரிப் பணவீக்கத்திற்குச் சிறிதளவில் பங்களிப்புச் செய்தன.

**கொநுவிசுட்டெண் கூடையிலிருந்து உடன் உணவு, வலு, போக்குவரத்து, அரிசி மற்றும் தேங்காய் ஆகிய பொருட்களை நீக்குவதன் மூலம் கணிக்கப்படுகின்ற ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2011 மாச்சிலிருந்து யூலை வரை தொடர்ந்து அதிகரித்த போதிலும் திசெம்பரில் 4.7 சதவீதத்துக்கு வீழ்ச்சி அடைந்தது.** இவ்வாண்டின் முதல் சில மாதங்களில் ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் கூடியளவு உறுதியாக விளங்கிய போதிலும் 2011 மேயிலிருந்து அதிகரித்துச்செல்லும் போக்கைக் காட்டி செத்தெம்பரில் 7.6 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்தில் விளங்கியது. இப்போக்கு நேர்மாறானதுடன் பின்பு ஆண்டு சராசரி பணவீக்கம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து ஆண்டிறுதியில் 6.9 சதவீதத்தை அடைந்தது. மையப் பணவீக்கச் சுட்டெண்ணில்

ஆண்டுச் சராசரி மாற்றத்துக்கான பங்களிப்பு பெரும்பாலும் உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள் (62.5 சதவீதம்); புடவை மற்றும் காலணி (8.7 சதவீதம்); வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (8.6 சதவீதம்) ஆகிய துணைச் சுட்டெண்களிலிருந்து ஏற்பட்டது.

## மொத்த விற்பனை விலைச்சுட்டெண் (மொவிசு)

**முதலாந்தரச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2011இன் முதலாம் காலாண்டில் அதிகரித்துச் செல்லும் பாதையில் நகர்ந்து 2011 மாச்சில் 23.0 சதவீதம் கொண்ட உச்சமட்டத்தைப் பதிவு செய்தது.** எனினும், இது பின்பு படிப்படியாக வீழ்ச்சியடைந்து 2011 திசெம்பர் அளவில் 6.1 சதவீதம் கொண்ட எதிர்க்கணியத்தை அடைந்தது.

**இதேவேளை, ஆண்டுச் சராசரி நியதிகளிலான மொத்த விற்பனை விலைச்சுட்டெண் இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அதிகரித்துச் செல்லும் போக்கைத் தொடர்ந்து 2011சனவரியில் பதிவு செய்த 11.5 சதவீதத்திலிருந்து 2011 செத்தெம்பரில் 15.1 சதவீதத்தைப் பதிவு செய்தது.** எனினும், இதன் பின்பு, அதிகரித்துச் செல்லும் போக்கு எதிர்மாறாக்கி ஆண்டிறுதியில் 10.6 சதவீதத்தை அடைந்தது. உணவு துணைச் சுட்டெண் 2011இல் 10.3 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரியைப் பதிவு செய்தது. 10.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இரசாயனங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து துணைச் சுட்டெண்களும் 2011இல் ஆண்டுச் சராசரி அடிப்படையில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் துறை வாரியான வகைப்படுத்தலை பரிசீலனையில் கொள்கையில், உள்நாடு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய அனைத்து மூன்று துணை வகைகளின் விலைகளும் ஆண்டிறுதியில் ஆண்டுச் சராசரி அடிப்படையில் முறையே 5.5 சதவீதம், 11.7 சதவீதம் மற்றும் 14.5 சதவீதத்தால் அதிகரித்தன. தேங்காய் எண்ணெய், தேங்காய், கொக்கோ, இறப்பர் மற்றும் மிளகு என்பவற்றிலான விலை அதிகரிப்புக்கள் ஏற்றுமதித் தொகுதியிலான அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. இது போலவே, மொவிசுட்டெண்ணின் முடிவுப் பயன்பாட்டு வகைப்படுத்தலைப் பரிசீலனையில் கொள்ளும் போது நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீடு ஆகிய மூன்று வகைகளிலான விலைகள் 2011 திசெம்பரில் ஆண்டுச் சராசரி அடிப்படையில் முறையே 9.9 சதவீதம், 13.9 சதவீதம் மற்றும் 4.1 சதவீதத்தால் அதிகரித்தன. மொவிசுட்டெண் கூடையில் அனைத்துப் பொருட்களிடையே கோதுமை மா, தேங்காய் எண்ணெய், சீனி மற்றும் நெத்தலிக் கருவாட்டின் விலை அதிகரிப்புக்கள் நுகர்வோர் வகையிலான அதிகரிப்புக்கு பெருமளவில் பங்களித்திருக்கையில் கோதுமைத் தானியம், லொறி ரயர்கள், கொக்கோ, இறப்பர், பெற்றோல், தன்னியக்க டீசல் மற்றும் மண்ணெண்ணையின் விலை அதிகரிப்புகள் இடைநிலை வகையிலான அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தன.

**அட்டவணை 4.4 துறைரீதியான சுருக்கிகளும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும்**

| துறை | சுட்டெண் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 (அ) | 2011 (ஆ) | 2010/2009 (அ) | 2011/2010 (ஆ) |
| வேளாண்மை | 344.8 | 377.1 | 417.4 | 9.4 | 8.6 |
| கைத்தொழில் | 323.0 | 342.4 | 366.5 | 6.0 | 7.5 |
| பணிகள் | 304.7 | 327.6 | 351.9 | 7.5 | 8.0 |
| **மொ.உ.உ** | **315.8** | **338.9** | **364.8** | **7.3** | **7.8** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்புப் புள்ளிவிபர திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி (மொஉஉசு)

**பொருளாதாரத்தில் பொதுவான விலை மாற்றத்தை அளவிடும் மொஉஉற்பத்திச் சுருக்கி 2010இல் பதிவு செய்யப்பட்ட 7.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 7.8 சதவீதத்தால் அதிகரித்தது.** முன்னையாண்டை போலவே வேளாண்மைத் துறை முன்னைய ஆண்டைப் போலவே 2011இல் பணவீக்கத்தின் உயர்ந்த வீதத்தைத் தொடர்ந்து பதிவு செய்தது. எனினும், வேளாண்மைத் துறையிலான பணவீக்கம் 2010இன் 9.4 சதவீதத்திலிருந்து 2011இல் 8.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு 2011இல் இறப்பர், தெங்கு மற்றும் மீன்பிடி துணைத் துறை விலைகளில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியே காரணமாக விளங்கியது. கைத்தொழில் துறையிலான விலைகள் முன்னைய ஆண்டின் 6.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 7.5 சதவீதத்தால் அதிகரித்த போதிலும் பொருளாதாரத்தின் மூன்று முக்கிய துறைகளிடையே மிகக் குறைந்த பணவீக்கத்தைப் பதிவு செய்தன. இவ்வதிகரிப்பு தயாரிப்பு துணைத் துறையின் விலைகளிலான வளர்ச்சியால் பெரும்பாலும் ஏற்பட்டது. அதே வேளை பணிகள் துறையானது 2011இல் இரண்டாவது உயர் பணவீக்கமாக 8.0 சதவீதத்தினை பதிவுசெய்ததுடன் இறக்குமதி வர்த்தகம்; வங்கி தொழில்துறை, காப்புறுதி, உண்மைச்சொத்து மற்றும் உள்நாட்டு வர்த்தக துணை துறைகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4.3 கூலிகள்

**அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் இரு பகுதியினரதும் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இல் அதிகரித்தன.** தொழில் சந்தையில் சுதந்திரமாக கூலிகள் தீர்மானிக்கப்படும் முறைசாராத் தனியார் துறையிலுள்ள ஊழியர்களிடையே பெயரளவுக் கூலிகளிலான அதிகரிப்பு குறிப்பிடத்தக்கதாக விளங்கியது. இதேவேளை, கூலி நிர்ணயச் சபைகளால் கூலிகள் ஆளுகைப்படுத்தப்படும் முறைசார் தனியார் துறையின் பொதுவான பெயரளவு வீதச் சுட்டெண்ணும் 2011இல் அதிகரிப்பைப் பதிவு செய்தது. 2011 சனவரியில் நடைமுறைக்கு

அட்டவணை 4.5 கூலிவீதச் சுட்டெண்கள்

(திசெம்பர் 1978=100)

| தொழில்நிலை வகை | சுட்டெண் | | | | | | சதவீத மாற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு | | | உண்மையான (அ) | | | பெயரளவு | | | உண்மையான (அ) | | |
| | 2009 | 2010 | 2011 (ஆ) | 2009 | 2010 | 2011 (ஆ) | 2009 | 2010 | 2011 (ஆ) | 2009 | 2010 | 2011 (ஆ) |
| 1. அரச ஊழியர்கள் | | | | | | | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | 4,502.8 | 4,651.6 | 4,964.5 | 159.0 | 154.7 | 154.7 | 9.4 | 3.3 | 6.7 | 5.7 | -2.7 | 0.0 |
| நிறைவேற்றுத்தரமல்லாதோர் | 4,082.4 | 4,210.4 | 4,490.1 | 144.2 | 140.1 | 139.9 | 8.9 | 3.1 | 6.6 | 5.2 | -2.8 | -0.1 |
| சிற்றூழியர்கள் | 4,943.5 | 5,116.1 | 5,465.1 | 174.6 | 170.2 | 170.3 | 10.0 | 3.5 | 6.8 | 6.3 | -2.5 | 0.1 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 3,215.3 | 3,321.7 | 3,576.1 | 113.5 | 110.5 | 111.5 | 9.4 | 3.3 | 7.7 | 5.7 | -2.7 | 0.9 |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | | | | | | | |
| அனைத்து வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 2,171.4 | 2,865.3 | 2,996.1 | 76.7 | 95.3 | 93.3 | 4.9 | 32.0 | 4.6 | 1.5 | 24.3 | -2.0 |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 2,349.4 | 3,327.6 | 3,427.2 | 83.0 | 110.7 | 106.8 | 2.7 | 41.6 | 3.0 | -0.6 | 33.4 | -3.6 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 2,054.0 | 2,199.0 | 2,402.1 | 72.5 | 73.1 | 74.9 | 9.4 | 7.1 | 9.2 | 5.9 | 0.7 | 2.4 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 1,545.8 | 1,673.3 | 1,851.8 | 54.6 | 55.6 | 57.7 | 12.8 | 8.2 | 10.7 | 9.3 | 1.8 | 3.8 |

(அ) உண்மைக் கூலிவீதச்சுட்டெண் 2009இல் கொநுவிசு (2002=100)இனை அடிப்படையாகவும் 2010 முதல் கொநுவிசு (2006/07=100) இனை அடிப்படையாகவும் கொண்டது.
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வந்த அரச துறைக் கூலிகளின் மேல் நோக்கிய திருத்தத்தின் மூலம் அரசதுறை ஊழியர்களின் ஆண்டுச் சராசரி பெயரளவுக் கூலிகளும் 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் அதிகரித்தன. ஒட்டுமொத்தமாக, முறைசாராத் தனியார் துறையின் உண்மைக் கூலிகள் அதிகரித்திருக்கையில் முறை சார்ந்த தனியார் துறையின் கூலிகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வேளாண்மைத் துறையின் உண்மைக் கூலிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக 2011இல் வீழ்ச்சியடைந்தன. இதே வேளை பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 2011இல் விலைமட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் முழுமையாக எதிரீடு செய்யப்பட்டமையால் மத்திய அரசாங்க ஊழியர்களின் பொதுவான உண்மைக் கூலி வீத சுட்டெண் இவ்வாண்டில் எதுவித மாற்றத்தையும் பதிவு செய்யாதிருக்கையில் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களின் உண்மைக் கூலிகள் சிறிதளவால் அதிகரித்தன.

## அரச துறைக் கூலிகள்

**அரச துறை ஊழியர்களின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண்கள் 2011இல் மேலும் அதிகரித்தன.** இவ்வதிகரிப்பு பெரும்பாலும் அடிப்படைச் சம்பளத்தின் 5 சதவீதத்திற்குச் சமமான ஓய்வூதியமற்ற சிறப்புப்படி மற்றும் 2011 சனவரியிலிருந்து அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியில் ஏற்பட்ட ரூ.600 அதிகரிப்புக் காரணமாக ஏற்பட்டது. இதன்படி, ரூ.22,935 இற்குக் குறைந்த ஆரம்ப மாதாந்த சம்பளத்தைப் பெறும் அரச துறை ஊழியர்களுக்குச் செலுத்தத்தக்க மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி 2011 சனவரியிலிருந்து ரூ.5,250 இலிருந்து ரூ.5,850 இற்கு உயர்வடைந்தது. இத்துடன், 2011 சனவரியிலிருந்து இலங்கை அதிபர்கள் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையின் சம்பள அளவிலான அதிகரிப்பும் அரச துறையின் அதிகரித்துச் செல்லும் பெயரளவுக் கூலிகளுக்கு பங்களிப்புச் செய்தது. நிறைவேற்றுத் தரமல்லாத அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்களின் பெயரளவுக்கூலி வீதச் சுட்டெண்கள் 2010இன் 3.0 - 3.5 சதவீத வீச்சிலான அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2011இல் முறையே 6.6 சதவீதம், 6.8 சதவீதம் மற்றும் 7.7 சதவீதத்தால் அதிகரித்தன. இதன் விளைவாக, மத்திய அரச ஊழியர்களின் பொதுவான பெயரளவுக்கூலி வீதச் சுட்டெண் 2010இன் 3.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.7 சதவீதத்தால் அதிகரித்தது.

**அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2011இல் கலப்பான போக்குகளைப் பிரதிபலித்தன.** சிற்றூழியர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் 2011இல் முறையே 0.1 சதவீதம் மற்றும் 0.9 சதவீத உண்மைக் கூலி அதிகரிப்புகளை அனுபவித்திருக்கையில் நிறைவேற்றுத் தரமல்லாத ஊழியர்கள் அவர்களின் உண்மைக் கூலியில் 0.1 சதவீத இழப்பைச் சம்பாதித்தனர். முன்னைய ஆண்டில், நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்களின் உண்மைக் கூலி வீதங்கள் முறையே 2.8 சதவீதம், 2.5 சதவீதம் மற்றும் 2.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. மத்திய அரச ஊழியர்களின் பொதுவான உண்மைக் கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.7 சதவீத உண்மைக் கூலி வீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் மாற்றமின்றிக் காணப்பட்டது.

## முறைசார்ந்த தனியார் துறைக் கூலிகள்

**கூலி நிர்ணயச் சபைகளின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் ஊழியர்களின் கூலிகளது ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்களால் அளவிடப்படும் நன்கமைந்த தனியார் துறையின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இல் 4.6 சதவீதத்தால் அதிகரித்தன.**

வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் பணிகள் ஆகிய முறைசார்ந்த தனியார் துறையின் மூன்று பிரதான வகைகளிலுமான ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இல் பெயரளவு நியதிகளில் முறையே 3.0 சதவீதம், 9.2 சதவீதம் மற்றும் 10.7 சதவீதத்தால் அதிகரித்தன. 2011இல் பணிகள் துறை மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையிலான பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களிலான சார்பு ரீதியிலான உயர் அதிகரிப்புகள் பெரும்பாலும் 2010 ஒகத்தில் இவ்விரு துறைகளிலுள்ள ஊழியர்களின் ஆகக் கறைந்த கூலிகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பால் ஏற்பட்டது.

**பணவீக்கத்திற்காக சீராக்கப்பட்ட பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண்களின்படி கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் பணிகள் துறைகளிலுமுள்ள முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்கள் அவர்களின் உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக்களை அனுபவித்திருக்கையில் வேளாண்மைத் துறையிலுள்ள ஊழியர்கள் 2011இல் உண்மைக் கூலி இழப்பைச் சந்தித்தனர்.** இதன்படி, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் பணிகள் துறைகளில் உண்மைக் கூலிகள் 2011இல் முறையே 2.4 சதவீதத்தாலும் 3.8 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில் வேளாண்மைத் துறையில் உண்மைக் கூலி வீதச் சுட்டெண் 2011இல் 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களுக்கான பொதுவான உண்மைக் கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இல் 2.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## முறைசாராத் தனியார் துறைக் கூலிகள்

**முறைசாராத் தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் 2011இல் பெயரளவு மற்றும் உண்மை நியதிகள் இரண்டிலும் அதிகரித்தன.** முறைசாராத் தனியார் துறை, அரச துறை மற்றும் முறைசார் தனியார் துறைக்குள் உள்ளடக்கப்படாத அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்குகிறது. முறைசாராத் தனியார் துறையில் கூலிகள் பொருளாதாரத்தில் கேள்வி மற்றும் நிரம்பல் நிபந்தனைகள் இரண்டையும் மற்றும் தொழிலாளர்களின் ஒதுக்கப்பட்ட கூலியின் மட்டத்தையும் பிரதிபலிக்கும் வகையில் சீராக்கம் செய்யப்படும் போக்கைக் கொண்டுள்ளது. வேளாண்மை மற்றும் கட்டட நிருமாணத்தை உள்ளடக்கும் இத்துறையின் கூலித் தகவல் மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்படுகிறது.

**முறைசாராத் தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் பெயரளவு நியதிகளில் 2011இல் 11.9 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தால் அதிகரித்தன.** வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறைகளிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகளிலான அதிகரிப்புகள் 2011இல் முறையே 12.1

**அட்டவணை 4.6 துறை மற்றும் பால் அடிப்படையில் முறைசாரா தனியார் துறையின் நாளாந்ந கூலிகள்**

| துறை | ஆண்டுச் சராசரி (ரூபா) | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயரளவு | | உண்மையான (ஈ) | |
| | 2009 (அ) | 2010 (ஆ) | 2011 (ஆ) (இ) | 2010 | 2011 (ஆ) (இ) | 2010 | 2011(ஆ) (இ) |
| 1. வேளாண்மைத்துறை | | | | | | | |
| தேயிலை | | | | | | | |
| ஆண் | 488 | 545 | 617 | 11.7 | 13.2 | 5.1 | 6.0 |
| பெண் | 356 | 396 | 438 | 11.2 | 10.6 | 4.7 | 3.6 |
| இறப்பர் | | | | | | | |
| ஆண் | 532 | 588 | 658 | 10.5 | 11.9 | 4.1 | 4.8 |
| பெண் | 416 | 474 | 490 | 13.9 | 3.4 | 7.3 | -3.2 |
| தெங்கு (உ) | | | | | | | |
| ஆண் | 651 | 700 | 783 | 7.5 | 11.9 | 1.2 | 4.8 |
| நெல் | | | | | | | |
| ஆண் | 613 | 658 | 704 | 7.3 | 7.0 | 1.1 | 0.2 |
| பெண் | 423 | 454 | 530 | 7.3 | 16.7 | 1.1 | 9.3 |
| 2. கட்டடவாக்கத்துறை (உ) | | | | | | | |
| மரவேலையாள் | | | | | | | |
| முதன்மை மரவேலையாள் - ஆண் | 934 | 1,000 | 1,115 | 7.1 | 11.5 | 0.8 | 4.4 |
| தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 615 | 656 | 729 | 6.7 | 11.1 | 0.4 | 4.1 |
| கொத்தனார் | | | | | | | |
| முதன்மை மரவேலையாள் - ஆண் | 925 | 994 | 1,093 | 7.5 | 10.0 | 1.2 | 3.0 |
| தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 623 | 667 | 729 | 7.1 | 9.3 | 0.8 | 2.4 |

(அ) கூலித்தகவல்கள் 90 நிலையங்களிருந்தான மாதாந்த கூலிகளை அடிப்படையாகக் கொண்டவை.
(ஆ) கூலித்தகவல்கள் 102 நிலையங்களிலிருந்தான கூலிகளை அடிப்படையாகக் கொண்டவை
(இ) தற்காலிகமானது
(ஈ) உண்மைக் கூலி சதவீத மாற்றங்கள் 2009இல் கொநுவிசு(2002=100)இனை அடிப்படையாகவும் 2010 முதல் கொநுவிசு (2006/07=100)இனை அடிப்படையாகவும் கொண்டவை
(உ) தெங்கு மற்றும் நிருமாணத்துறைகளில் பெண் பங்கேற்பு குறைவாகும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

சதவீதமாகவும் 11.1 சதவீதமாகவும் விளங்கின. வேளாண்மைத் துறையினுள் தேயிலை மற்றும் தெங்கு துணை வகைகளிலான சராசரி நாளாந்தக் கூலிகள் ஒவ்வொன்றும் 13.3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் நெல் மற்றும் இறப்பர் துணை வகைகளிலான கூலிகள் 2010இன் கூலிகளுடன் ஒப்பிடுகையில் 2011இல் முறையே 11.2 சதவீதத்தாலும் 10.9 சதவீதத்தாலும் அதிகரித்தன. இவ்வதிகரிப்புகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இல் வேளாண்மைத் துறையிலுள்ள துணை வகைகளில் சார்பு ரீதியில் உயர்ந்து விளங்கின. தெங்கு துணைத் துறையிலான உயர் கூலி அதிகரிப்பு பெரும்பாலும் தொழிலாளர் பற்றாக்குறைகளால் ஏற்பட்டது. தேயிலை உற்பத்தி மற்றும் அதன் சராசரி விலையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும் தேயிலைத் துணைத் துறையிலான கூலிகள் 2011இல் அதிகரிப்பைப் பதிவு செய்தன. இத்துடன், பன்னாட்டுச் சந்தையிலான உயர் இறப்பர் விலைகள், உற்பத்தியாளர்கள் அவர்களின் தொடர்பான தொழிலாளர்களுக்கு உயர் கொடுப்பனவை செலுத்தக்கூடியவர்களாக இருந்தமையினால் இறப்பர் துணைத் துறையிலுள்ள ஊழியர்களுக்கான பெயரளவுக் கூலிகளில் அதிகரிப்பை ஏற்படுத்தியது.

**கட்டடவாக்கத் துறையிலுள்ள கொத்தனார் மற்றும் தச்சுவேலை ஆட்களுக்கான நாளாந்தக் கூலிகள் 2010இல் முறையே 6.7 சதவீதம் மற்றும் 6.9 சதவீத அதிகரிப்பைத் தொடர்ந்து 2011இல் முறையே 11.9 சதவீதம் மற்றும் 10.3 சதவீதம் கொண்ட உயர் அதிகரிப்புகளைப் பதிவு செய்தன.** இவ்வதிகரிப்பு பெரும்பாலும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக குடிப்பெயர்வு காரணமாக அத்தகைய தொழிலாளர்களின் பற்றாக்குறைகளுடன் இணைந்து கட்டடவாக்கச் செயற்பாடுகளுக்கான தொழிலாளர்களுக்கான தொடர்ச்சியான உயர் கேள்வியால் பகுதியளவில் ஏற்பட்டது.

**வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறைகளிலான அனைத்துத் துணை வகைகளிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகளில் 2011இல் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது.** இதன்படி, வேளாண்மைத் துறையிலுள்ள தெங்கு, தேயிலை, நெல் மற்றும் இறப்பர் துணைத் துறைகளின் நாளாந்த உண்மைக் கூலிகள் 2011இல் முறையே 6.2 சதவீதம், 6.1 சதவீதம், 4.1 சதவீதம், மற்றும் 3.8 சதவீதத்தால் சராசரியாக அதிகரித்தன. இதேவேளை, கட்டடவாக்கத் துறையிலுள்ள கொத்தனார் மற்றும் தச்சுவேலைத் துணைத் துறைகளின் உண்மைக் கூலிகள் முறையே 4.8 சதவீதம் மற்றும் 3.3 சதவீத அதிகரிப்புகளைப் பதிவு செய்தன. பொதுவாக, வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறைகள் இரண்டும் 2010இல் பதிவு செய்யப்பட்ட 2.5 சதவீத மற்றும் 0.5 சதவீத உண்மைக் கூலி அதிகரிப்புகளுடன் ஒப்பிடுகையில் 2011இல் உண்மைக் கூலியில் முறையே 5.0 சதவீதம் மற்றும் 4.0 சதவீதம் கொண்ட சார்பு ரீதியிலான உயர் அதிகரிப்பைப் பதிவு செய்தன.

**அட்டவணை 4.7 மாவட்ட அடிப்படையில் குடித்தொகை**

'000ஆட்கள்

| மாவட்டம் | 2010 | 2011 (அ) | மாற்றம் (அ) | சதவீத மாற்றம் (அ) |
|---|---|---|---|---|
| கொழும்பு | 2,553 | 2584 | 31 | 1.2 |
| கண்டி | 1,431 | 1447 | 16 | 1.1 |
| இரத்தினபுரி | 1,125 | 1139 | 14 | 1.2 |
| பதுளை | 886 | 897 | 11 | 1.2 |
| குருநாகல் | 1,563 | 1577 | 14 | 0.9 |
| கம்பகா | 2,177 | 2191 | 14 | 0.6 |
| காலி | 1,084 | 1096 | 12 | 1.1 |
| அநுராதபுரம் | 830 | 840 | 10 | 1.2 |
| களுத்துறை | 1,135 | 1144 | 9 | 0.8 |
| மாத்தறை | 839 | 847 | 8 | 1.0 |
| நுவரெலியா | 761 | 768 | 7 | 0.9 |
| அம்பாறை | 644 | 654 | 10 | 1.6 |
| மட்டக்களப்பு | 543 | 550 | 7 | 1.3 |
| புத்தளம் | 779 | 789 | 10 | 1.3 |
| யாழ்ப்பாணம் | 611 | 617 | 6 | 1.0 |
| மாத்தளை | 497 | 504 | 7 | 1.4 |
| திருகோணமலை | 374 | 380 | 6 | 1.6 |
| அம்பாந்தோட்டை | 571 | 576 | 5 | 0.9 |
| மொனராகல | 440 | 445 | 5 | 1.1 |
| பொலனறுவை | 410 | 415 | 5 | 1.2 |
| முல்லைத்தீவு | 148 | 144 | -4 | -2.7 |
| கிளிநொச்சி | 156 | 160 | 4 | 2.6 |
| வவுனியா | 174 | 177 | 3 | 1.7 |
| கேகாலை | 818 | 823 | 5 | 0.6 |
| மன்னார் | 104 | 105 | 1 | 1.0 |
| மொத்தம் | 20,653 | 20,869 | 216 | 1.0 |

(அ) தற்காலிகமானது

மூலம் : பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

2011இல் நடு ஆண்டு குடித்தொகை 20.87 மில்லியனாக விளங்கியதுடன் **இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.0 சதவீத அதிகரிப்பாகும்.** 2011இல் முல்லைத்தீவு தவிர்ந்த அனைத்து மாவட்டங்களில் குடித்தொகை அதிகரித்தது. குடித்தொகையில் உயர் அதிகரிப்புகள் கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, குருணாகல், கம்பகா, காலி, பதுளை, அம்பாறை, புத்தளம், அநுராதபுதம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் இவை அனைத்தும் சேர்ந்து 2011இல் குடித்தொகையிலான பொதுவான வளர்ச்சியில் கிட்டத்தட்ட 70 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தன.

### தொழிற்படை

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, 10 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட பொருளாதார ரீதியாக தொழிற்படுகின்ற குடித்தொகையாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட தொழிற்படை

**அட்டவணை 4.8 குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)**

| விடயம் | 2008 | 2009 | 2010 | 2011 (ஆ) (இ) 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | ஆண்டுக்கான |
|---|---|---|---|---|---|---|---|
| குடும்ப அலகுகளின் குடித்தொகை (ஈ) '000 ஆட்கள் | 16,320 | 16,578 | 16,862 | 16,950 | 17,190 | 17,126 | 17,088 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,082 | 8,074 | 8,108 | 8,133 | 8,308 | 8,266 | 8,236 |
| தொழில் உள்ளோர் | 7,648 | 7,602 | 7,707 | 7,784 | 7,957 | 7,943 | 7,894 |
| தொழில் அற்றோர் | 434 | 471 | 401 | 350 | 352 | 323 | 342 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (உ) | 49.5 | 48.7 | 48.1 | 48.0 | 48.3 | 48.3 | 48.2 |
| ஆண் | 67.8 | 66.6 | 67.1 | 65.9 | 66.3 | 67.4 | 66.5 |
| பெண் | 33.2 | 32.8 | 31.2 | 31.9 | 32.3 | 31.1 | 31.8 |

(அ) வடக்கு மாகாணத் தரவுகள் உள்ளடக்கப்படவில்லை
(ஆ) நான்காம் காலாண்டுக்கான காலாண்டு தொழிற்படை அளவீடானது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2011இல் மேற்கொள்ளப்படவில்லை
(இ) தற்காலிகமானது
(ஈ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரும்
(உ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரைக் கொண்ட குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

முன்னைய ஆண்டின் 8.11 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் 8.24 மில்லியனுக்கு 1.6 சதவீதத்தால் சிறிதளவில் அதிகரித்தது[1].

மொத்த தொழிற்படை 7.89 மில்லியன் தொழிலாளர்களையும் 0.34 மில்லியன் தொழிலற்றவர்களையும் உள்ளடக்குகிறது. இதேவேளை, 10 வயதிற்கும் அதற்குக் கூடுதலுமான மொத்தக் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமாகக் குறிப்பிடப்படும் தொழிற்படை பங்கேற்பு வீதம் கடந்த ஆண்டின் 48.1 சதவீதத்திலிருந்து 2011இல் 48.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கான பங்களிப்பு கடந்த ஆண்டின் 31.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 31.8 சதவீதமாக மதிப்பிடப்பட்ட பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதத்தால் ஏற்பட்டது. இதேவேளை, ஆண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதம் கடந்த ஆண்டின் 67.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 66.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**துறை ரீதியான தொழிற்படை பங்கேற்பு வீதம் கிராமியத் துறையின் பங்கேற்பு நகரத் துறையை விட உயர்வாக இருப்பதை எடுத்துக்காட்டிய வேளையில் நகரத் துறையில் பெண்களின் பங்கேற்பு ஆண்களை விட குறிப்பிடத்தக்களவில் குறைவாகக் காணப்பட்டது.** தொழிற்படை பங்கேற்பு வீதத்தின் பால் வகையான பகுப்பாய்வு அண்மைக்காலம் முழுவதும் ஆண்களின் பங்கேற்பு வீதம் பெண்களின் பங்கேற்பு வீதத்தை விட இருமடங்குக்கும் கூடுதலாக இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. எனினும், கடந்த சில ஆண்டுகளில் பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதம் தொடர்பாக அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2010 உடன் ஒப்பிடுகையில் 2011இல் சிறு அதிகரிப்பை பதிவு செய்து போக்கை நேர்மாறாக்கியது.

1 இலங்கையில் தொழிற்படை, தொழில்நிலை மற்றும் தொழிலின்மை மட்டங்கள் மற்றும் போக்குகள் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன. 2008ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிலிருந்து காலாண்டு தொழிற்படை அளவீட்டின் உள்ளடக்கம் கிழக்கு மாகாணத்துக்கு விரிவுபடுத்தப்பட்டது. இருப்பினும், தொகைமதிப்பு புள்ளிபிவரத் திணைக்களமானது முழு நாட்டையும் உள்ளடக்கும் விதத்தில் அதன் மாதிரி உள்ளடக்கத்தை விரிவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் வட மாகாணம் கடந்த சில ஆண்டுகளில் காலாண்டு தொழிற்படை அளவீட்டில் உள்ளடக்கப்படவில்லை. இதன்படி, வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி வட மாகாணம் தவிர்ந்த தொழிற்படைத் தரவு பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டது. இத்துடன் 2011இன் நான்காம் காலாண்டுக்கான காலாண்டு தொழிற்படை அளவீடு தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படவில்லை.

## தொழில்நிலை

காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி தொழில்புரியும் ஆட்களின் எண்ணிக்கை 2010இன் 7.71 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் 7.89 மில்லியனுக்கு 2.4 சதவீதத்தால் அதிகரித்தது[2]. உயர்ந்த மற்றும் பரந்த அடிப்படையிலான 8.3 சதவீத வளர்ச்சியுடன் 2011இல் பொருளாதாரத்திலான பாராட்டத்தக்க செயலாற்றம் 2011இல் அதிகரித்த வேலை வாய்ப்புக்களுக்கு முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்கியது.

**இவ்விரு காலப்பகுதிகளுக்கிடையே முக்கிய கைத்தொழில் தொகுதிகளிடையே தொழில் குடித்தொகையின் உள்ளடக்கத்தில் மாற்றமொன்று காணப்பட்டது.** இதன்படி, மொத்த தொழில்நிலையில் வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளின் பங்குகள் 2011இல் அதிகரிப்புகளைப் பதிவு செய்திருக்கையில் பணிகள் துறையின் பங்கு சுருக்கத்தைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் வேளாண்மைத் துறை ஆதிக்கம் செலுத்தி ஆகக் கூடிய எண்ணிக்கையான தொழில்நிலையை உருவாக்கியிருக்கையில் கடந்த சில ஆண்டுகளில் மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆகக் கூடிய பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கிய பணிகள் துறை தொழில்நிலையின் இரண்டாவது மிகப் பெரிய எண்ணிக்கையை உருவாக்கியது. இதன்படி, மொத்தத் தொழில்நிலையில் வேளாண்மைத் துறையின் பங்கு முன்னைய ஆண்டின் 32.7 சதவீதத்திலிருந்து 2011இல் 32.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. வேளாண்மைத் துறையிலான அதிகரித்த தொழில்நிலை உருவாக்கம்

2 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீடு, தொழில்புரியும் ஆள் என்பது அளவீட்டுக் காலத்தில் சம்பளத்திற்காக அல்லது இலாபத்திற்காக அல்லது குடும்பத்தின் நன்மைக்காக (கொடுப்பனவின்றி) ஏதோவொரு வகையான வேலையில் ஈடுபட்டுள்ள ஒருவர் என வரைவிலக்கணம் செய்கிறது. தொழில்நிலை தகமைகளின்படி, அளவீட்டுக் காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ஆட்களாக தொழில்புரிந்த ஆட்கள், தொழில்தருநர்கள், சொந்தமாகத் தொழில்புரிவோர் (சுய தொழில்புரிவோர்) அல்லது கொடுப்பனவு செலுத்தப்படாத குடும்ப வேலையாட்கள் ஆகியோர் காலாண்டுத் தொழிற்படை அளவீட்டில் தொழிலுள்ள ஆட்களாகக் கருதப்பட்டனர். இது அளவீட்டு காலப்பகுதியில் ஒருவர் தொழிலில் ஈடுபடாத போதும் அவர் தொழிலொன்றைக் கொண்டிருப்பாராயின் அவரையும் உள்ளடக்குகிறது. சுகயீனம், மோசமான வானிலை மற்றும் தொழிலாளர் பிணக்குகள் காரணமாக தற்காலிகமாக தொழிலுக்குச் செல்லாத ஊழியர்களும் தொழில்புரிபவர்களாகவே கருதப்படுவர்.

**அட்டவணை 4.9** பொருளாதார செயற்பாடுகளின்படி தொழில்நிலை (அ)

| துறை | '000 ஆட்கள் | | | | | | | மொத்த தொழில்நிலை சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 (ஆ) (இ) | | | | 2008 | 2009 | 2010 | 2011 (ஆ) (இ) |
| | | | | 1ஆம் கால் | 2ஆம் கால | 3ஆம் கால் | ஆண்டுக்கானது | | | | |
| **வேளாண்மை** | **2,490** | **2,476** | **2,520** | **2,511** | **2,684** | **2,610** | **2,602** | **32.6** | **32.6** | **32.7** | **32.9** |
| **கைத்தொழில்** | 2,005 | 1,910 | 1,867 | 1,951 | 1,878 | 1,916 | 1,915 | 26.2 | 25.1 | 24.2 | 24.3 |
| தயாரிப்பு | 1,414 | 1,348 | 1,318 | 1,389 | 1,349 | 1,357 | 1,365 | 18.5 | 17.7 | 17.1 | 17.3 |
| கட்டடவாக்கம் (ஈ) | 591 | 562 | 548 | 563 | 529 | 559 | 550 | 7.7 | 7.4 | 7.1 | 7.0 |
| **பணிகள்** | **3,154** | **3,216** | **3,320** | **3,321** | **3,394** | **3,423** | **3,380** | **41.2** | **42.3** | **43.1** | **42.8** |
| வர்த்தகம், உணவகங்கள் முதலியன. | 1,095 | 1,119 | 1,196 | 1,178 | 1,217 | 1,165 | 1,187 | 14.3 | 14.7 | 15.5 | 15.0 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 448 | 445 | 484 | 507 | 432 | 529 | 489 | 5.9 | 5.9 | 6.3 | 6.3 |
| நிதி, காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து | 241 | 227 | 264 | 266 | 301 | 276 | 281 | 3.2 | 3.0 | 3.4 | 3.6 |
| தனிப்பட்ட பணிகள் மற்றும் ஏனையவை | 1,370 | 1,426 | 1,375 | 1,370 | 1,446 | 1,453 | 1,423 | 17.9 | 18.8 | 17.9 | 17.9 |
| **மொத்த தொழில்நிலை** | **7,648** | **7,602** | **7,707** | **7,784** | **7,957** | **7,943** | **7,894** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| தொழிற்படையின் சதவீதம் | 94.6 | 94.2 | 95.0 | 95.7 | 95.8 | 96.1 | 95.8 | | | | |

(அ) வடக்கு மாகாணத் தரவுகள் உள்ளடக்கப்படவில்லை
(ஆ) நான்காம் காலாண்டுக்கான காலாண்டு தொழிற்படை அளவீடானது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2011இல் மேற்கொள்ளப்படவில்லை
(இ) தற்காலிகமானது
(ஈ) சுரங்கமகழ்தல், கல்லுடைத்தல், மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் என்பன கட்டவாக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட வேளாண்மைத் தூண்டலால் உதவப்பட்டு குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய காணிகள் பயிர் செய்யப்பட்டதால் ஏற்பட்டதாகும். இதேவேளை, கைத்தொழில் துறையில் தொழில்நிலையின் பங்கு 2010இன் 24.2 சதவீதத்திலிருந்து 2011இல் 24.3 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்திருக்கையில் பணிகள் துறையில் இப்பங்கு 2010இன் 43.1 சதவீதத்திலிருந்து 2011இல் 42.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. மொத்த தொழில்நிலைக்கு பணிகள் துறையில் தொழில்நிலையின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சி போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல்; மற்றும் வர்த்தகம் மற்றும் விடுதி ஆகிய துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்டது.

**தொழில்நிலை தகைமை நியதிகளில் கொடுப்பனவு இல்லாத குடும்பத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்தருநர்களின் பங்குகள் 2011இல் அதிகரித்திருக்கையில் அரச துறை ஊழியர்களின் பங்கு 2010இல் காணப்பட்ட அதே மட்டத்திலேயே மாறாதிருந்தது.**

**அட்டவணை 4.10** தொழில்நிலைத் தகைமை (அ)

சதவீதம்

| காலம் | அரசதுறை ஊழியர்கள் | தனியார் துறை ஊழியர்கள் | தொழில் தருநர்கள் | சுயவேலை செய்வோர் | கொடுப்பனவற்ற குடும்ப தொழிலாளர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2008 | 15.2 | 41.2 | 2.9 | 30.3 | 10.5 | 100.0 |
| 2009 | 15.5 | 42.1 | 2.6 | 29.2 | 10.6 | 100.0 |
| 2010 | 14.3 | 41.2 | 2.6 | 31.5 | 10.4 | 100.0 |
| **2011 ஆண்டு (ஆ)(இ)** | **14.3** | **40.4** | **2.9** | **31.4** | **11.0** | **100.0** |
| 1 ஆம் காலாண்டு | 13.6 | 40.5 | 3.1 | 31.9 | 10.9 | 100.0 |
| 2 ஆம் காலாண்டு | 14.4 | 40.6 | 2.7 | 31.6 | 10.7 | 100.0 |
| 3 ஆம் காலாண்டு | 15.0 | 40.2 | 2.8 | 30.7 | 11.3 | 100.0 |

(அ) வடக்கு மாகாண தரவுகள் உள்ளடக்கப்படவில்லை
(ஆ) நான்காம் காலாண்டுக்கான காலாண்டு தொழிற்படை அளவீடானது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2011இல் மேற்கொள்ளப்படவில்லை
(இ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தனியார் துறை ஊழியர்கள் மற்றும் சுய தொழில் புரிவோரின் சார்பு ரீதியான பங்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பொருட்படுத்தாது இவ் வகைகளிலான ஊழியர்களின் எண்ணிக்கை 2011 இல் அதிகரிப்புக்களை பதிவுசெய்தன. 2011இல் தனியார் துறையில் தொழில்நிலையின் பங்கு வீழ்ச்சியடைந்ததற்கு மத்தியிலும் அதன் ஆதிக்கத்தைத் தொடர்ந்து பேணி அரச துறை வசமிருந்த 14.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 40.4 சதவீதம் கொண்ட முக்கிய பங்கைப் பதிவு செய்தது. இதேவேளை, கொடுப்பனவு இல்லாத குடும்பத் தொழிலாளர்கள் வகை ஆகக்கூடிய எண்ணிக்கையான தொழில்நிலைகளை உருவாக்கியதுடன் சுய தொழில்புரிவோர் வகை 2011இல் தொழில்நிலை வாய்ப்புக்களின் இரண்டாவது பெரிய எண்ணிக்கையை உருவாக்கியது. தொழில்தருநர்கள், சுய தொழில்புரிவோர் மற்றும் கொடுப்பனவு இல்லாத குடும்பத் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலான வளர்ச்சி அண்மைக் காலங்களில் நன்கமையாத துறையில் வளர்ந்து வரும் பொருளாதாரம் கூடிய தொழில்நிலை வாய்ப்புக்களை உருவாக்கியமையைப் பிரதிபலிக்கிறது. 2011இல் வேளாண்மைத் துறையில் அதிகரித்த தொழில்நிலை

**அட்டவணை 4.11** அரசதுறை தொழில்நிலை

| துறை | 2009 | 2010 | 2011(அ) | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2010/ 2009 | 2011/ 2010 (அ) |
| அரசு (ஆ) | 1,047,041 | 969,574 | 986,386 | -7.4 | 1.7 |
| அரசுசார் (இ) | 266,543 | 250,017 | 246,091 | -6.2 | -1.6 |
| **அரசதுறை** | **1,313,584** | **1,219,591** | **1,232,477** | **-7.2** | **1.1** |

(அ) தற்காலிகமானது
(ஆ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(இ) அரசகூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகள் அரச அதிகார சபைகள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உருவாக்கம் இலங்கையில் தொழிலின்மையைக் குறைப்பதில் குறிப்பாகக் கொடுப்பனவு இல்லாத தொழிலாளர்கள் மற்றும் சுய தொழில்புரியும் தொழிலாளர்ளின் பங்களிப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது.

## தொழிலின்மை

**காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, தொழிலின்மை வீதம் 2010இல் பதிவு செய்யப்பட்ட 4.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 4.2 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.** தொழிலற்றவர்களின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 401,000 உடன் ஒப்பிடுகையில் 2011இல் 342,000 ஆக மதிப்பிடப்பட்டது. இவ்வீழ்ச்சியானது பொருத்தமான பேரண்டப் பொருளாதாரச் சூழல் காரணமாக பொருளாதாரத்தின் அனைத்து மூன்று துறைகளிலும் அவதானிக்கப்பட்ட செழிப்பான வளர்ச்சியுடன் இணைந்திருந்ததுடன் 2011இல் கூடிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க உதவியது.

**க.பொ.த (உ/த) மற்றும் உயர் தகைமைகளை வைத்திருப்பவர்களிடையே 2008 இலிருந்து அவதானிக்கப்பட்ட தொழிலின்மையிலான அதிகரித்துச் செல்லும் போக்கு 2011இல் வீழ்ச்சியைப் பதிவு செய்தது.** இதன்படி, இவ்வகையிலான தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 11.6 சதவீதத்திலிருந்து 2011இல் 9.0 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. இத்துடன், க.பொ.த. (சா/த) தகைமைகளை வைத்திருப்பவர்களிடையே தொழிலின்மை வீதமும் 2010இன் 6.9 சதவீதத்திலிருந்து 2011இல் 5.2 இற்கு வீழ்ச்சியடைந்தது.

**தொழிலின்மை வீதம் 15 - 29 வயதுத் தொகுதியினரிடையேயும் 2011இல் வீழ்ச்சியடைந்தது.** 15 - 19 ஆண்டுகள் மற்றும் 20 - 29 ஆண்டுகள் கொண்ட வயதுத் தொகுதியினரிடையே இளைஞர் தொழிலின்மை 2010இன் முறையே 20.3 சதவீதம் மற்றும் 13.8 சதவீதத்திலிருந்து 2011இல் முறையே 15.4 சதவீதத்திற்கும் 12.4 சதவீதத்திற்கும் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. இத்துடன், ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரினதும் இளைஞர் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் குறைவாக விளங்கியது.

வரைபடம் 4.2 தொழிற்படையின் போக்குகள் மற்றும் தொழிலின்மை (2008-2011)




## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**இலங்கையில் தொழிலின்மை மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பின் பங்களிப்பை பரிசீலனை செய்கையில், 2011இல் தொழில் வாய்ப்புக்கான புலம்பெயர்வில் சிறிதளவு மெதுவடைவு காணப்பட்ட போதிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொழில்நிலையின் முக்கிய மூலமாக தொடர்ந்து விளங்கியது.** வழமையான மாதிரிகளைப் பின்பற்றி 2011இன் முதன் மூன்று காலாண்டுகளில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்றவர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு காணப்பட்டிருக்கையில் இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் மெதுவடைவு பதிவு

அட்டவணை 4.12 தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக தொழிலற்றோர்) (அ)

| வகை | 2008 | 2009 | 2010 | 2011 (ஆ) (இ) 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து | **5.4** | **5.8** | **4.9** | **4.3** | **4.2** | **3.9** | **4.2** |
| பால் வகைப்படி | | | | | | | |
| ஆண் | 3.7 | 4.3 | 3.5 | 3.0 | 2.7 | 2.5 | 2.7 |
| பெண் | 8.4 | 8.6 | 7.7 | 6.7 | 7.0 | 6.7 | 6.8 |
| வயது அடிப்படையில் | | | | | | | |
| 15 - 19 | 20.8 | 20.9 | 20.3 | 14.6 | 16.4 | 15.1 | 15.4 |
| 20 - 29 | 13.7 | 15.4 | 13.8 | 12.8 | 13.2 | 11.3 | 12.4 |
| 30 - 39 | 3.1 | 3.7 | 3.1 | 2.8 | 2.3 | 3.0 | 2.7 |
| 40 உம் அதற்கு மேலும் | 1.2 | 1.4 | 1.0 | 0.8 | 0.8 | 0.5 | 0.7 |
| கல்விமட்ட அடிப்படையில் | | | | | | | |
| வகுப்பு 4/ஆண்டு 5 மற்றும் அதற்கு கீழ் | - | - | - | - | - | - | - |
| வகுப்பு 5-9/ஆண்டு 6-10 | 4.5 | 5.0 | 3.6 | 3.2 | 3.6 | 3.0 | 3.3 |
| கா.பொ.த (சா/த)/பொ.தே.க.சா. | 7.8 | 8.5 | 6.9 | 5.3 | 5.8 | 4.3 | 5.2 |
| கா.பொ.த (உ/த)/உ.தே.க.சா மற்றும் அதற்கு மேல் | 10.5 | 11.2 | 11.6 | 10.0 | 7.8 | 9.3 | 9.0 |

(அ) வடமாகாணம் தவிர்ந்த தரவுகள்
(ஆ) நான்காம் காலாண்டுக்கான காலாண்டு தொழிற்படை அளவீடானது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2011இல் மேற்கொள்ளப்படவில்லை
(இ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 4.13 வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்காக சென்றோர்

| தொழில்நிலை | 2009 | | 2010 | | 2011 (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| மொத்த தொழிலிலுள்ளோர் | 247,126 | 100.0 | 267,507 | 100.0 | 262,960 | 100.0 |
| மூலத்தின்படி | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 156,567 | 63.3 | 160,498 | 60.0 | 146,456 | 55.7 |
| ஏனையோர் | 90,559 | 36.7 | 107,009 | 40.0 | 116,504 | 44.3 |
| பால் வகையின்படி | | | | | | |
| ஆண்கள் | 119,381 | 48.3 | 136,850 | 51.2 | 135,870 | 51.7 |
| பெண்கள் | 127,745 | 51.7 | 130,657 | 48.8 | 127,090 | 48.3 |
| மனிதவலு வகையின் படி | | | | | | |
| தொழில் வல்லுனர்கள் | 2,832 | 1.1 | 3,057 | 1.1 | 3,835 | 1.5 |
| நடுத்தர மட்டம் | 6,388 | 2.6 | 6,884 | 2.6 | 6,106 | 2.3 |
| எழுத்துவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 6,719 | 2.7 | 7,923 | 3.0 | 9,888 | 3.8 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 61,321 | 24.8 | 71,537 | 26.7 | 67,703 | 25.7 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 6,015 | 2.4 | 4,932 | 1.8 | 4,169 | 1.6 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 50,173 | 20.3 | 60,422 | 22.6 | 63,443 | 24.1 |
| விட்டுப் பணிப் பெண்கள் | 113,678 | 46.0 | 112,752 | 42.1 | 107,816 | 41.0 |

(அ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

செய்யப்பட்டது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மதிப்பீடுகளின்படி 2011இல் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 262,960 இற்கு 1.7 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத ஊழியர்கள், மத்திய தரத்திலான ஊழியர்கள் மற்றும் பணிப்பெண்கள் வகைகளில் வெளிநாட்ட வேலை வாய்ப்புக்கான தொழிலுக்கமர்த்தும் எண்ணிக்கையில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்றவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட ஆகக்கூடிய வீழ்ச்சி பணிப்பெண்கள் வகையில் ஏற்பட்டதுடன், மொத்த எண்ணிக்கையில் இவர்களின் தொடர்பான பங்கு 2009இன் 46 சதவீதத்திலிருந்து 2011இல் 41 சதவீதத்திற்கு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புக்காக சென்றவர்களில் மற்றும் தொடர்பான தொழிலாளர் வகையின் எண்ணிக்கை தொழில்சார் நிபுணர்கள், எழுதுவினைஞர்கள் மற்றும் பங்கு தற்போதும் குறைந்த மட்டத்தில் தொடர்ந்து காணப்பட்டதற்கு மத்தியிலும் இவ்வகையில் வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புக்கான புலம்பெயர்வில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதம் பதிவு செய்யப்பட்டது.

**கூடிய வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் விட்டுச் சென்ற குடும்பங்களின் பாதுகாப்பையும் நலன்புரியையும் அதிகரிப்பதற்கு தொடர்பான அதிகாரசபைகள் 2011இலும் தொடர்ந்து முன்னெடுப்புக்களை மேற்கொண்டன.** இவ்வழிமுறைகள் தொழில்சார் நிபுணர்கள், தொழில்நுட்ப மற்றும் தேர்ச்சி பெற்ற மனித வலுவை வழங்கும் சிறந்த வழங்குநராக இலங்கையை ஏற்படுத்துவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதையும் 2015இல் ஐ.அ.டொலர் 10.0 பில்லியன் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களைக் கொண்டு வருவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. தாதியர் பணி, கடல் பணிகள், கணக்கீடு, தகவல் தொழில்நுட்பம், வங்கித்தொழில் மற்றும் பொறியியல் போன்ற சிறப்பியல்பு வாய்ந்த துறைகளில் ஆற்றலுள்ள தொழில்சார் நிபுணர்கள், தொழில்நுட்ப மற்றும் தேர்ச்சி பெற்ற பணியாளர்களை வழங்கும் நாடாக இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்துவதை எதிர்பார்க்கும் கொள்கையூடாக தேர்ச்சி பெறாதவர்களிலிருந்து ஓரளவு தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியுள்ள தரங்களுக்கு மேல் நோக்கிய நகர்வை இன்றியமையாததாக்கும் கொள்கையூடாக இவ்விலக்குகளை அடைவதற்கு அமைச்சு உபாயங்களை வகுக்கிறது. இப்புதிய கொள்கை அணுகுமுறை புலம்பெயர் தொழிற்படையை மீள்வர்த்தக அடையாளப்படுத்தும் அதேவேளை வெளிநாட்டுக்கு வேலைக்காகச் செல்லும் தொழிலாளர்களின் மனித ஆற்றலை ஒருமுகப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டிருக்கிறது. இது வெளிநாட்டுக்குச் செல்ல முன்னரான பயிற்சி, மீள் தேர்ச்சியளித்தல் மற்றும் தொழிலாளரின் பாதுகாப்புக்கு கவனம் செலுத்தல் என்பவற்றை வலியுறுத்துகிறது. இவ்வழிமுறைகள் மேலும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கமைப்பு வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல், வேலை வாய்ப்பின் வெவ்வேறு துறைகளில் வெளிநாட்டு வேலை தேடுவோர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களின் பொறுப்புக்கூறலை முன்னேற்றுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. புலம்பெயர்ந்த ஊழியர்கள் நலன்புரி வசதிகளை வழங்கல் மற்றும் அவர்களால் முகம் கொடுக்கப்படும் இடர்ப்பாடுகள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான உதவியை விரிவுபடுத்தல் என்பவற்றூடாக மேலும் பாதுகாக்கப்பட்டனர். வெளிநாட்டு வேலை

வாய்ப்புக்கான ஆட்சேர்ப்பு முகவர்கள் இம்முகவர்களை ஒழுங்குமுறைப்படுத்துவதனூடாக மேலும் பலப்படுத்தப்பட்டதுடன் இது நேர்மையான பணி வழங்குநர்களிடமிருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடும் மக்களுக்கு உதவும். வெளிநாட்டு வேலை வாய்ப்பை முன்னேற்றுவதற்கான இக்கொள்கை முன்னெடுப்புக்கள் பணவனுப்பல்களின் எண்ணிக்கை மற்றும் அளவு இரண்டிலும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பில் நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் பலமான அடிப்படையை நிர்ணயிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான புதிய மூலங்களைக் கண்டுபிடிப்பதற்கும் ஆற்றலுள்ள தேர்ச்சி பெற்றோர் மற்றும் தொழில்சார் நிபுணர் வகைகளுக்காக கூடிய வெளிநாட்டு வேலைகளைப் பெறுவதற்குமான இக்கொள்கை மாற்றங்கள் 2011 இல் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான தொழிலுக்கமர்த்தலில் சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.** வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்லும் தொழில்சார் நிபுணர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் மற்றும் தொடர்பான குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கையில் பணிப்பெண்கள் மற்றும் ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் வகைகள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. இதன்படி, இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கைத்தொழிலில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்த பணிப்பெண்களின் வெளிச்செல்லல்கள் 2011இல் 107,816இற்கு 4.4 சதவீதத்தால் மேலும் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்லும் மொத்த வெளிச்செல்லல்களில் பணிப்பெண்களின் சார்பு ரீதியிலான முக்கியத்துவமும் 2010இன் 42.1 சதவீதத்திலிருந்து 2011இல் 41.0 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. இது போலவே, மத்திய தர, தேர்ச்சி பெற்ற மற்றும் ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் தொகுதிகளும் வீழ்ச்சிகளைப் பதிவு செய்து 2010 உடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு மனிதவலு வகையும் அவற்றின் தொடர்பான பங்கில் வீழ்ச்சியை ஏற்படுத்தின. முக்கியத்துவத்தில் மூன்றாவது வகையாக விளங்கிய தேர்ச்சியற்ற தொழிலாளர் புலம்பெயர்வை ஊக்கமிழக்கச் செய்வதற்கான முன்னெடுப்புகளை அரசாங்கம் மேற்கொண்ட போதிலும் இவ்வகை வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புக்காகச் செல்வோரின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பைப் பதிவு செய்து அதன் தொடர்பான பங்கை 2010இன் 22.6 சதவீதத்திலிருந்து 2011இல் 24.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2010 ஐப் போலவே வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை அது போல் அவர்களின் தொடர்பான பங்கு பெண்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்பான பங்கை விட உயர்வாகக் காணப்பட்டது. எனினும், 2010 உடன் ஒப்பிடுகையில் ஆண் மற்றும் பெண் இருபாலாரினதும் குடிப்பெயர்வு 2011இல் வீழ்ச்சியடைந்தது. இதனால் ஆண் மற்றும் பெண் வெளிச்செல்கைகளின் பால் உள்ளமைப்பு கடந்த ஆண்டின் 51:49 உடன் ஒப்பிடுகையில் 2011இல் 52:48 என்ற விகிதத்தைப் பதிவு செய்தது.

| அட்டவணை 4.14 | நாடுகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றோர் | | | | |
|---|---|---|---|---|---|

| நாடு | 2010 | | 2011 (அ) | | மாற்றம் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு |
| கட்டார் | 54,676 | 20.4 | 52,553 | 20.0 | -2,123 | -3.9 |
| சவுதி அரேபியா | 70,830 | 26.5 | 68,637 | 26.1 | -2,193 | -3.1 |
| ஐக்கிய அரபு இராச்சியம | 42,310 | 15.8 | 39,339 | 15.0 | -2,971 | -7.0 |
| குவைத் | 48,108 | 18.0 | 50,657 | 19.3 | 2,549 | 5.3 |
| ஏனையவை | 51,583 | 19.3 | 51,774 | 19.7 | 191 | 0.4 |
| மொத்தம் | 267,507 | 100.0 | 262,960 | 100.0 | -4547 | -1.70 |

(அ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சந்தை மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் கூடியளவில் கவனம் செலுத்தி பணிப்பெண்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான வெளிச்செல்லல்களில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானதை ஈர்த்தக்கொண்டது.** மத்திய கிழக்குப் பிராந்தியத்தினுள் சவூதி அரேபியா, கட்டார், குவைத் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் 2011இல் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கான மொத்த வெளிச்செல்லல்களில் 80.3 சதவீதத்துக்கு வகைகூறின. 2010இல் மொத்த புலம்பெயர் தொழிலாளர்களின் 62.7 சதவீதத்திற்கு இணைந்து பங்களிப்புச் செய்த கட்டார், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசு 2011இல் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. ஏனைய அனைத்து நாடுகளுக்கான வெளிச்செல்லல்கள் சிறிதளவு அதிகரிப்பைப் பதிவு செய்து மொத்த வெளிச்செல்லல்களுள் இந்நாடுகளின் தொடர்பான பங்கை முன்னைய ஆண்டின் 19.3 சதவீதத்திலிருந்து 19.7 சதவீதத்திற்கு அதிகரித்தன. வெளிநாட்டு வேலை வாய்ப்பை முன்னேற்றுவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவை தொழிலாளர்களைப் பேணும் நாடுகளுடன் உரிய அதிகாரசபைகளால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நுழைந்தமை, வெவ்வேறு ஆர்வலர்களை இணைக்கும் வலையமைப்பைப் பகிரும் பல தரப்பட்ட தகவலின் விருத்தி, அரசாங்கத்திற்கு அரசாங்கம் என்ற ஆட்சேர்ப்பு முறைமைகள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்தன.

**நாட்டுக்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலின் முக்கியமானதும் உறுதியானதுமான மூலமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்ந்து விளங்கியது.** 2011இல் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த வெளிநாட்டு பணவனுப்பல்கள் முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 4,116 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5,145 மில்லியனுக்கு 25 சதவீதத்தால் அதிகரித்தன. தொழில் தலத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்பை அதிகரித்தல், வருகைக்குப் பின் தொழிலாளர்களுக்கான உதவியை விரிவுபடுத்தல், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் விட்டுச் சென்ற குடும்பங்களின் நன்மையைக் கவனித்தல் மற்றும் ஏனைய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

என்பவற்றுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளார்ந்த வளம் மிக்க புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பை மிகவும் கவர்ச்சிகரமானதாக ஏற்படுத்தி வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் மேலுமொரு அதிகரிப்புக்கு வழியமைக்கிறது.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கைப் பின்பற்றி ஒட்டுமொத்த தொழிலாளர் உற்பத்தித்திறன் 2011இல் தொடர்ந்து முன்னேறியது.** தொழிலாளரொருவருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியால் (2002 இன் நிலையான விலைகளில்) அளவிடப்பட்டவாறான தொழிலாளர் உற்பத்தித்திறன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இல் தொழிலாளரொருவருக்கு ரூ.362,800இற்கு 5.7 சதவீதத்தால் அதிகரித்தது. உற்பத்தித்திறனிலான அதிகரிப்பு பெரும்பாலும் கைத்தொழில் (7.6 சதவீதத்தால்), மற்றும் பணிகள் (6.7 சதவீதத்தால்) துறைகளிலான உற்பத்தித்திறனிலான வளர்ச்சியால் ஏற்பட்டிருக்கையில் வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறன் இவ்வாண்டில் 1.7 சதவீத பின்னடைவைச் சந்தித்தது.

**இலங்கை தன்னை பிராந்திய முதலீட்டு சேருமிடமாக நிலை நிறுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதால் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரிப்பது தவிர்க்கமுடியாததாகும்.** கைத்தொழில் துறையில் உற்பத்தித்திறனின் குறிப்பிடத்தக்க சாதனையானது மேம்பாடடைந்த செயல்முறை மற்றும் பின்பற்றப்பட்ட நடைமுறைகள், மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்கள் என்பவற்றால் ஏற்பட்டிருக்கலாம். அபிவிருத்திச் செயல்முறையில் காணப்படக்கூடிய உலகளாவிய சவால்கள் மற்றும் உள்நாட்டுத் தடைகளைப் பரிசீலனையில் கொள்ளும் போது போட்டித்தன்மை நீடித்து நிலைத்து இருப்பதற்கும் சந்தைப் பங்கை தக்க வைப்பதற்கும் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளின் உற்பத்தித்திறனில் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் கொண்டிருப்பது அத்தியாவசியமாகும்.

**அட்டவணை 4.15 முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தித்திறன்**

| | 2009 | 2010 | 2011 (அ) |
|---|---|---|---|
| நிலையான விலைகளில் (2002) மொ.உ.உ ரூ.மில்லியன் | **2,449,214** | **2,645,542** | **2,863,854** |
| வேளாண்மை | 295,097 | 315,610 | 320,346 |
| கைத்தொழில் | 701,129 | 760,334 | 838,932 |
| பணிகள் | 1,452,988 | 1,569,598 | 1,704,576 |
| தொழிலாளர் உற்பத்தியாக்கம் ரூ.'000 ஆளுக்கு (ஆ) | 322.2 | 343.3 | 362.8 |
| வேளாண்மை | 119.2 | 125.3 | 123.1 |
| கைத்தொழில் | 367.1 | 407.3 | 438.1 |
| பணிகள் | 451.8 | 472.8 | 504.3 |

(அ) தற்காலிகமானது
(ஆ) வடக்கு மாகாணம் தவிர்ந்த தொழில்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**உற்பத்தித்திறனை மேம்படுத்தும் முறைமைகள், பயனுறும் விதத்தில் தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பின்பற்றல் என்பவற்றூடாக பணிகள் துறையின் உற்பத்தித்திறன் மேலும் முன்னேற்றப்படலாம்.** தலைக்குரிய வருமானத்தை 2016ஆம் ஆண்டளவில் ஐ.அ.டொலர் 4,000 இற்கு அதிகரிப்பதற்கும் பொருளாதாரத்தை கடல் போக்குவரத்து, வான் போக்குவரத்து, வர்த்தகம், வலு மற்றும் அறிவுக்கான பிராந்திய மையமாக மீள்நிலைப்படுத்துவதற்கும் திட்டங்கள் காணப்படுவதால் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைந்து அவ்வாறான இலக்கை அடைவதற்கு பணிகள் துறையில் உற்பத்தித்திறனிலான மேம்பாடு மிக முக்கியமானதாகும்.

**வேளாண்மை இயற்கையாகவே வானிலை மற்றும் ஏனைய இயற்கைக் காரணிகள் மீது பெருமளவுக்கு தங்கியிருப்பதால் இத்துறையில் உற்பத்திறன் மாறுபடுதல் இக்காலப்பகுதியில் தவிர்க்க முடியாததாகும்.** 2011இல் வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனிலான வீழ்ச்சி 2011இன் முதலாம் காலாண்டில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்பட்ட உற்பத்தியின் சுருக்கத்தால் ஏற்பட்டதாகும். குறிப்பாக, வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனின் முன்னேற்றம் முக்கியமானதாகும். ஏனெனில், இது உணவுப் பொருட்களின் விலையைக் குறைந்தளவில் பேண உதவி பொருளாதாரத்தில் உயர் உண்மை வளர்ச்சி வீதத்தை அடைவதற்கு உதவுகிறது. எனவே, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு மேலதிகமாக வளமாக்கியின் பொருத்தமான பயன்பாடு, முன்னேற்றமடைந்த விதைகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள், புதியவற்றைக் கண்டுபிடித்தல், எந்திரமயப்படுத்தல் தொடர்பாக வேளாண்மையாளர் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினுள் கூடிய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

## தொழில் உறவுகள் மற்றும் தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள்

**தொழிலாளர் உறவுகள் அண்மைய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவில் முன்னேறின.** கொள்கைகளின் பயனுறுதிமிக்க நடைமுறைப்படுத்தல், உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதிகார சபைகளால் மேற்கொள்ளப்பட்ட சாதகமான தலையீடுகள் தொடர்பான துறைகளில் கைத்தொழில் சுமுகநிலையை மீள ஏற்படுத்த உதவியதன் மூலம் பொதுவான உற்பத்தித்திறனை அதிகரித்தது. குறிப்பாக 2011இன் நிலைமையானது பொருளாதாரத்திற்கு வழமையான பாரிய சேதங்களை ஏற்படுத்துகின்ற நீண்ட கைத்தொழில் பிணக்குகள் காணப்பட்ட 2009இற்கு முன்பு நிலவிய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பாராட்டத்தக்கதாக இருந்தது. கைத்தொழில் சுமுகநிலையினூடாக உற்பத்தித் தொழில் வாய்ப்பைச் செயற்படுத்துவதற்கு கொள்கை

அட்டவணை 4.16 தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்

| ஆண்டு | பெருந்தோட்டம் | | | ஏனையவை (அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2008 | 34 | 34,014 | 41,525 | 17 | 3,917 | 24,130 | 51 | 37,931 | 65,655 |
| 2009 | 2 | 300 | 300 | 6 | 4,720 | 7,365 | 8 | 5,020 | 7,665 |
| **2010** | **9** | **3,185** | **23,037** | **6** | **1,923** | **2,034** | **15** | **5,108** | **25,071** |
| 1ஆம் காலாண்டு | 3 | 804 | 14,220 | 3 | 369 | 408 | 6 | 1,173 | 14,628 |
| 2ஆம் காலாண்டு | 2 | 449 | 6,009 | 1 | 218 | 218 | 3 | 667 | 6,227 |
| 3ஆம் காலாண்டு | 2 | 332 | 1,208 | 2 | 1,336 | 1,408 | 4 | 1,668 | 2,616 |
| 4ஆம் காலாண்டு | 2 | 1,600 | 1,600 | - | - | - | 2 | 1,600 | 1,600 |
| 2011 (ஆ) | 19 | 6,692 | 23,513 | 8 | 3,807 | 15,673 | 27 | 11,039 | 39,186 |
| 1ஆம் காலாண்டு | 1 | 106 | 106 | 1 | 1,500 | 5,356 | 2 | 1,606 | 5,462 |
| 2ஆம் காலாண்டு | 4 | 433 | 3,028 | 3 | 1,272 | 7,697 | 7 | 1,705 | 10,725 |
| 3ஆம் காலாண்டு | 6 | 1,062 | 2,102 | 3 | 970 | 2,490 | 9 | 2,572 | 4,592 |
| 4ஆம் காலாண்டு | 8 | 5,091 | 18,277 | 1 | 65 | 130 | 9 | 5,156 | 18,407 |

(அ) அரசசார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானது

மூலம் : தொழில் திணைக்களம்

வகுக்கும் பயனுறு வழிமுறையாக சமுகப் பேச்சுவார்த்தையை அங்கீகரித்தல் மற்றும் வேலைத்தலத்தில் ஆற்றல்மிக்க உறவுகளைப் பேணி வளர்த்தல் தவிர்க்க முடியாததாகும்.

**2011இல் வேலை நிறுத்தங்கள் மற்றும் இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை மிதமானளவில் அதிகரித்த போதிலும் இவ் எண்ணிக்கை 2009 இற்கு முன் நிலவிய எண்ணிக்கையைவிட குறிப்பிடத்தக்களவு குறைவானதாகும்.** 2011இல் தனியார் துறையில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தங்கள் மற்றும் இழக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. இதன்படி, தனியார் துறையில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2010இல் அறிவிக்கப்பட்ட 15 உடன் ஒப்பிடுகையில் 2011இல் 27 இற்கு அதிகரித்திருக்கையில் இழக்கப்பட்ட மொத்த மனித நாட்கள் முன்னைய ஆண்டின் 25,071 உடன் ஒப்பிடுகையில் 2011இல் 39,186 இற்கு அதிகரித்தன. இது போலவே, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர் எண்ணிக்கையும் 2010இன் 5,108 இலிருந்து 11,039 இற்கு அதிகரித்தது. வேலை நிறுத்தங்களின் மொத்த எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் பெருந்தோட்டத் துறையிலான கைத்தொழில் பிணக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும்.

**தொழிற்சந்தையின் தளர்வுக்கும் பாதுகாப்பிற்கும் இடையில் சமநிலையை பேணுவதற்கு ஒழுங்குப்படுத்தல் கட்டமைப்பினை முன்னேற்றகரமானதாக்குதல் மற்றும் சமூக நலத் துறையியல் மற்றும் தொழில் உறவுகளை ஊக்குவித்தல் என்பன முக்கியமானதாக கருதப்பட்டது.** தொழிலாளர் மற்றும் தொழில் நிலையுடன் தொடர்பான பிரச்சினைகள் சிக்கலானவையாகவும் பரந்துபட்டனவாகவும் காணப்பட்டதனால் இவைதொடர்பான நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளை மீளாய்வுசெய்வதற்கு முன்முயற்சிகள் 2011இல் எடுக்கப்பட்டது. இதன்படி நவீனகால தேவைகளை பூர்த்திசெய்வதற்காக 2011 ஒத்தோபர் 06இல் 2011ஆம் ஆண்டு கைத்தொழில் முரண்பாடுகள் (திருத்தச்) சட்டம் இல. 39 அறிமுகப்படுத்தப்பட்டது. விரும்பத்தகாத தொழிலாளர் நடவடிக்கைகளுக்காக அதிகபட்ச அபராதம் குறிப்பிட்ட திருத்தத்தில் அதிகரிக்கப்பட்டது.